பிஸ்மில்லாஹி

# முகவுரை.

—(ப)—

எனது சகோதரரான முஸ்லிம்களே!

வேதவாக்கியம், மெய்ஞ்ஞானப்பொருள் ஆதலால், இலக்கணம், இலக்கியங்களுக் கொவ்வாமையால், கதா யிருந்தால் எனது சகோதரரான முஸ்லிம்கள் கற்றோர் அங்கீகரிப்பாரென நூல் ஆசிரியன் கருத்து.

பிஸ்மில்லாஹி

# சாற்றுக்கவிகள்.

—o—

மேலப்பாளையம். அத்தியடிதெரு
ஷாகுல்ஹமீதுப் புலவரவர்கள் இயற்றியது.

புகழரிதானவன் புகழோடு நிறைந்தவன்
புகலும்முஸ்லீங்கள் மனமிலே
அகலாமல் நின்றவன் ஆலத்தைப் படைத்தவன்
ஆதியின் சொற்படிக்கே
அகலஆத்துக்கணை கொத்துவாப்பள்ளிரெண்
டாதிபால் கட்டிவைத்தோர்
அவர்நாமம் பீர்முகம்மதவர்பேரன் சுல்தானுல்
ஆரிபீன்பள்ளிகட்டி இகலிலாயோங்க அருள்
இன்பஞானக்கவிகள் மழைமாரி பொழிந்திட
மெத்தவும் தவகீர்த்தியுடையோன்
சகலஒலி நாயகம் கௌதுமுகையதீன்
சற்குருவின் கிருபையுண்டாம்
சாத்தியிக் கவிபோற்றித் தூதித்திடும்
ஷாகுல்ஹமீது புலவனே.

ரவணசமுத்திரம், நெடுந்தெரு.

மஸ்தான்முகம்மதுநெயினார் அவர்கள் இயற்றியது

### ஆசிரிய விருத்தம்.

திருவளரும் ரவணசமுத்திரமீதுஞ்
சில்விடத்துஞ் செழுங்கற்பள்ளி
பிரியமுட னியற்றிய
பீர் முகம்மதெனும்
பெயருடையோர் பெருங்குலத்தில்
அருமையுட னுதித்த
முகம்மது முகையதீன்
சிந்தையசடகற்றி
ஒருவனருள் கொண்டியற்று
மெஞ்ஞானக் கவிகளெங்கு மோங்குங்
குருவளரும் முகம்மது நெயினார் மஸ்தான்
யின்சொல் வாக்கியமே.

முற்றிற்று

பிஸ்மில்லா ஹிர்.

# நூலாசிரியன் கருத்து.

## வேறு.

பத்துக்கோடி நன்னூலுங் கற்றாலென்ன
பார்த்தவர்கள் பாதமது பணிந்தாலென்ன
சத்துக்குள் சடப்பொருள் நின்றாப்போலே
சார்ந்திருந்த பூரணத்தை யறியவேணும்
தத்துவத்தை நித்தம்நித்தம் அம்சில்மாற்று
தன்னையின்னா ரென்றறிந்துகொள்ளும்
அத்திவேதந்தானாகி நிற்பாயாகில்
அரியாத பேரின்பம் அனுவிற்காண்பாய்
நித்தமுமே யென்மனமே மறந்திடாதே
நினைவும் மனதுமொன்றான வரவைப்பாரும்
பத்தியுள்ளோர் சுல்பதிலே கண்டுகொள்வார்
பகரமஹா மூதிற் பார்த்துக்கொள்வோம்
சித்தமதில் முகம்மது முகைய்தீனைக்காருமையா
செம்மலிறசூலுல்லா கிருபை

ஆமீன் ஆமீன்

பிஸ்மில்லாஹி.

# கலிமா அகவல்.

—o—

லாயிலாஹா இல்லல்லாஹுவென்ற கோட்டையி [லே
முகம்மதுற்றசூலுல்லாஹீ என்ற பந்தமது இலங்கு [ம்பாரும
காயில்லாக்கனியதுவே நடுவிலுண்டும்
காரண அஹமதுவே வலதுபுரம்
பூரணப்பாத்திமா யிடதுபுரம்
புண்ணியர் ஹஸைன் ஹுசைன் சந்திரசூரியராம்
ஓயாத இஷ்கதுவே அலியும்மாகும்
ஓர்மையுடன்முகைய்யதீனை என்நாவில்வைத்தேன்
ஒவ்வியத்தில் மௌனமாயிருந்துகொண்டு
தேயாத ஈமானில் தெளிந்துபார்க்க
தெளிவான ஐவரையும் ஒளிவாய்க்காண்பேன்
காயில்லாக்கனியதுவை கண்டுகொள்ள
கயிறுலே உயிரையும் கொருபான்செய்வேன்
ஹுவாலே ரூகையும் அணுவில்பூட்டி
குதுசியான ராஜாவை கண்டுக்கொள்ள
நல்லாகதவமுனிவர் சத்தமென்ன

## நூலாசிரியன் கருத்து.

நலமான யாறஹீம் றஹீம்மென்று ஓதும்பாரும்
பொல்லாத இபுலீஸ் மாய்கையெல்லாம்
புகழாலே யழிந்துமே போகும்பாரும்
சல்லல்லா நபியுடைய உம்மத்தோரே
சலவாத்துமுழக்கமது முழங்குதையா
மாயாமல் மாய்ந்தோரே தானேபாரும்
மஹ்ஷரின்வாசலிலே மதியால்காணும்
தேயாதஈமானுல் தெளிந்துபாரும்
தீதார் ஐனுல்லா தெருசனையாம்
ஆதாரம் மிஹ்றாஜி தொழுகையிலே
அல்லுபக லொன்றாக மனதைப்பூட்டும்
கோபமில்லா றஹ்மானே யானரிய
கொத்தவனேபாவமதைநீ பொருத்துகொள்வாய்
நாணைகொண்டுதான் நம்பிநின்றேன்
நன்மைக்கருள்செய்வாய் யாரஹீமே
தீனோரின்பிழைகளெல்லாம் நீபொருப்பாய்
மஸ்தான் முகம்மது முகையதீன் பிழையகல
ஆமீன்நீயே,

பிஸ்மில்லாஹி

# ஆரிபீன்மாலை.

(காப்புப்பதிகம்.)

அல்ஹம்தாய் நின்றதிரு பொருளைக்காண
அணுவணுவாய் நிறைந்ததுவை யணுவிற்காண்க
அலிபுலாம் மீமுமாய் வளர்ந்தமுத்தை
அணுவதி லிருந்ததுவே காப்புதானே.

பூவான அலிபதிலே புகுந்துபாரும்
பூரணமாய் வந்தகுரு புதுமைதோணும்
மாவான கலிமாவில் மகிமைகாணும்
மஹ்மூதின் வாசலிலே மதியே காப்பு.

தாத்தது சிபாத்தாகி தனித்தது மலுஹாராகி
காத்தது கருவுமாகி கலந்தது றாஹூமாகும் [ஹிம்
ஆத்துமாவில் நிறைந்தமுத்தே அல்ஹம்துலில்லா
ரூஸ்திரமாய்நானறிய சுல்தான்முஹம்மதே காப்பு

அஹதாக வந்ததொரு பொருளைக்காண
அகமியமாய் நிறைந்ததரு சமதைநாடி
ஹூஹத்தாகவந்ததுவை உகந்துகொண்டேன்
உண்மையதி லிருந்ததுவே யுருதிகாப்பு

ஒன்றிலு மடங்கா பரம்பொருளே
உண்மையுடன் யானிருந்துநன்மைகாண்பேன்
நன்றான மஹ்மூது கண்ணாடிக்குள்
நலமான முஹம்மதுவே காப்புதானே

ஒன்றான அல்லாவை உகந்திருந்தேன்
ஓர்மையதில் அஹமதுவை முன்னிருத்தி
வண்டானவாசியிலே யானறிய
வள்ளலிறசூலில்லா வடிவே காப்பு.

சத்தாக நின்றதிரு பொருளைக்காண
சமதாகவந்ததுவை சரத்தில்பாரும்
வித்தான ஹம்சதுவை முன்னிறுத்தி
விதியின் பயனறிய மதியே காப்பு

திருவான அழகிலே மனமேபாரு
தீன்தீன்முஹம்மதுவின் கோலங்காணும்
கருவான வாசியிலேதழுவிநில்லு
ஹாமீன் முஹம்மதுவே மூமீன்காப்புதானே.

எங்கெங்கும் ஓர்பொருளாய் இலங்குகின்றமெய்
கங்குல்பகாவில் நின்றிலங்கும் [பொருளே
திங்களொளிவே முஹம்மது முஹிதீனுக்கு
சங்கையுடன் ரக்ஷித்தாளும் சற்குருவே காப்பு

காப்புப் பதிகம் முற்றிற்றி.

பிஸ்மில்லாஹி

# ப த ங் க ள்.

இராகம்-எதுகுலகாம்போதி தாளம்-ஆதி

பல்லவி.

நாட்டப்படிக் கெனக்குதவிசெய்வாய்
றகுமானே யுன்னருள்பெற (நா)

அநுபல்லவி

கேட்டபடியெனக்குக் கிருபையுடனேதாரும்
வாட்டமில்லானைத்தேடி நாட்டமுடனேதொழும்

சரணங்கள்

அம்சை வருக்கமுன்னே றம்சாகநின்றோனே
தம்சேர்றூஹினை லென்னைப்படைத்தோனே

கூட்டைப்படைக்கமுன்னே குன்ஹாதாத்தாகநி
ன்றோனே
குன்னென்றசொல்லால் குல்லும் அமைத்தோனே

கலிமா அமைக்கமுன்னே கருணையாய்நிறைந்தோ
ஹாலிச்குல்ம்ஹாதுகில்காட்சிதருவோனே [னே

சமைதவருக்கமுன்னே சார்ந்தஅஹதானோனே
சாகாமற்செத்தவர்க்கு சாயுஜ்ஜியமானோனே (நா)

படைப்புபடைக்குமுன்னேபகரமாய் நின்றோனே

படையுண்டகோலத்திற் பகரமாய்வந்தோனே

உம்முல்குராஆனு வென்னைபடைத்தோனே
நன்மைக்காசரை யென்னிலமைத்தோனே (நா)

ஆத்தில்கித்தாபென்ற ஓர்மைகொடுத்தோனே
ஒன்றுக்குள்ளொன்றான வுண்மைரகுமானே

லாவென்றகனியதில் ரகசியம்வைத்தோனே
இலாஹறால்முத்துலகில் விலங்கிடறகுமானே

ஹையுல்கையூமாய்நின்ற கருணைறகுமானே
மெய்யில்மெய்யாய்வந்து மெய்யருள் முகம்மது
முகையதீனுக்கு (நா)

---

இராகம்-காம்போதி தாளம்-ரூபகம்

பல்லவி.

எண்ணமலெண்ணிமனம் உன்னிவரமீதில்
உருகுதே-நெஞ்சம் மிகவும் உருகுதேநெஞ்சம்

அநுபல்லவி

முன்னுலிலங்குவோனே முஷாகிதாவிலறிவோனே
கண்ணினாற்காண்போனே கருணைஎன்றகுமானே

சரணம் துள்ளல்

ககனமற்றரசையும் காட்டும்றகுமானே
காணமற்காண்கவே காட்சிதருவோனே
பூணமற்பூண்ட புகழுமிறையோனே

புண்ணியர் கல்லினிற் புகழுடன் நின்றேனே
பின்முடிக்கு
தாதாவெங்கள் தருமர்நபிபாதம் (தா)
தா ஹாநன்னபி யருமையிறசூலாம்
ஆகந்தெளிந்திட யணுவதைக்கண்டிட
மோகமேகொண்டிட முத்தியேபெற்றிட (எ)

இன்பக்கடலில்முழ்கி றயருள் தங்கிடவே
நம்புஞ்ஜம்ஹாத்தியே அம்புக் கணையதுபோல்
நம்புமுஸ்லீங்களே துன்பந்துயரம்போமே
இன்ப மஹாமுதைத்தேடி இணங்கிக் குன் ஹா [தாத்தைநாடி
முன்னே கண்ணினிலணுவாக்கூடி என் கண்ணே [கல்புக்குள்வாடி

துள்ளல்

அருமைவடிவாம் அஹமதுதானே
அண்ணலும் அணுவதுந்தன்னிலேகாணே
அருவவுருவமில்லான் ஆதியுந்தானே
ஆதாரமாகவே அஹத்ததிற்கானே தாதா
ஜனமாத்தவல்லுதம்மவஜ்ஹால்லாவின் [வெங்கள்
பயனையறிந்துகொள்ளுங் கைஜுஞ்ஷர்ரும்மறிய
ஹாமீமுகம்மதேவிள்ளும் கணக்கறிந்தபெரியோ [ரே
காணும்லனிடையிற்கண்டுதொழுதுகொள்ளும்
கருத்தாலறிந்துசொல்லும்தாயுங்காயுமாநில்லும்

துலங்ஹா அம்சது யிணங்கிடவர் வா
நலங்கொள்ளீமானை யுதிந்திட ஹோஜா
இலங்குமஹாமூதே எனையாள் ஹாஜா
மயங்காமல்காரு மன்னரேநேசா தாதா
லகத்து நலகல்இன்சானபிய் அஃசனித்தகவீனென்
பயனையறிந்துகொள்வீர் தன்னையறிவதற்காய் [ற
தாரதரமாய்பிரித்தான் உண்மைசிர்ரமைத்தான்
உன்னையறியாப்பாவம் உடையோனுக்கேவிரோத
என்னைப்படைத்தகோவே ஏகன்பிராநீயே [ம்
(துள்) மீமுக்குளிருந்திடும் மிஹாறுஜ்தாதா
மர்னுக்கானந்த மஹாமூதேவாவா
ஆணுக்கும்பெண்ணுக்குமனுவதுநேசா
தீனுக்கும்பகரமேதீனெங்கள் ஹாஜா தாதா
இல்மில்எகினதிலேயிருந்தாடுஞ்
சூஸ்திரத்தை இணங்கியறிந்துகொள்ளுநம்
(துள்) ஐனிலெகினதிலே அணுவானசிர்த்தை
இனிஅறிந்துபுகழ்ந்துநில்லும்
ஹக்குல்எகினதிலே கமாலியத்தைத்தெரிந்து
கண்டுதொழுதுகொள்ளுநம்கருத்தாலறிந்துநில்லும்
காலிக்குல்மஃனுக்கில்கருணையேவாவா
ஆலிமுல்பஷறுநீயனுவதுஆஆ
ஆதாரமிகுருஜிஅஹததில்தாதா
ஆனந்தகலிமாவில் ஹம்சதுநேசா
தீனில்முகம்மதுமுனையதீனுக்குதிடம்தரும்வாசா
தாதாவெங்கள்

# முகையதீன் ஆண்டவர் துதி

---

## அகவல்—வேறு.

காமிலின்கைபிடித்தால் கடும்பாவந்தானோடும்
மூமினைக்கண்டாக்கால் மூதேவித்தனமாரும்
ஆமினையறிந்தாக்கால் அரும்பிழையுந்தானகலும்
ஆமிலைமக்கண்டாக்கால் கேள்விமிகக்குறையும்
ஆரிபீனையடுத்தாக்கால் அதிகத்தவங்கிடைக்கும்
ஆலிமைத்துடர்ந்தாக்கால் அறிவுமிகவுண்டாம்
மூமின்கள்நிலையதிலே யான்புகுந்து
எங்கள்முகம்மதிறசூலையானறிய
ஜாமியீயானகண்ணே சர்குருபாமுகையதீனே

## வேறு. [ம்

குதுபதுவைக்கண்டாக்கால் குபிறதுவுந்தானகலு
குதுபதுவின்கைபிடித்தால்மனமானஈமானைத்தா
குதுபதுவின்வுபதேசம்பெற்றாக்கால் [ன்காட்டும்
வுடன்சோதி தானறிவோம்
குதுபதுவை பின்சென்றாக்கால் குதறத்துதாங்கி
குதுபதுவைநம்பிமிகயிருந்தாக்கால் [டைக்கும்
நல்வழியில்நாம்சேர்வோம்
குதுபதுவேகுபிர்களை யகற்றுதற்கு
குறிப்பானமந்திரமே வுரைப்பீரையா
மதிப்பில்லாரஹ்மானை மஹ்மூதிற்காண்பதற்
விதியறியமதிகாண அமுதம்வூட்டும் [கு
கெதிபெற முகம்மதுமுகைதீனுக்கு
உங்கள்கிருபையுண்டாம் மூமீன்

# முகையதீன் முனாசாத்து

---

## காப்பு.

மெய்ப்பொருளே மெய்யருளே
மேலவனின் தன்னழகே
ஹபியத்தாய்நின்ற கருணைப்
பெரும்பொருளே
வையகமெங்கும் வல்லபச்செங்
கோல் நடத்துமாதி
ஐயமில்லா பரம்பொருளே ஒன்னழகு
முகையதீன் கிருபைவேண்டும்.

---

## தொங்கல்.

திருவிலுருவாக நின்றமுத்தே
தீனோர் புகழ்ந்திடும் நாயகமே
குருவின் குருவான குலக்கொழுந்தே
கூட்டியெனை யாளு முகையதீனே.

அல்ஹம்தாய்நின்ற ஐந்தெழுத்தை
அல்லா தனைக்காண ஓரெழுத்தை
வல்லோனருள்பெற்ற குருமணியே
வருந்தினேன் யானும் யரையும்பீரே.

காட்டிவைத்திடு முத்தொளிவை
கருணை முகம்மதின் கோலங்காண
நாட்டிவைத்திடும் என்ஈமானிலே
நயனத்திடையிலே காட்டும்பீரே.

வல்லோன்குதறத்து அமானிதமாம்
வருந்தியறிந்திட சுல்பில்காட்டும்
எல்லைகூரத்து ற[illegible]மானிலே
இலங்கும்பொருளதைக் காட்டும்பீரே.

திருவாய் நின்றதை மனமறிய
தெளிவா யமைந்ததை ஐனில்காண
ஒளிவாய் வந்ததை முன்னிருத்தி
ஓர்மையில் காட்டும் கவுதொலியே.

திற்கெழுத்தானதை முன்னிருத்து
உருக்கெழுத் தானதை மனதில்பூட்டு
சுருக்கெழுத்தாலேபோன் உருபடுத்த
சுல்தான் நன்நஸீருவில் காட்டும்பீரே,

முகம்மதாகிய நாவில்ரெண்டை
மூலகருவென்றும் சரத்தில்பூட்டு
நன்மையாகிய நாத்தியெட்டை
நலமாம் ரூஹிலே தழுவிகட்டு.

தாலுமீமது ஒன்றாய்ப்பூட்டும்
ஏனோருகிலே தழுவிக்கட்டும்
கோலகலிமாவில் ஹம்மைசக்காட்டும்
குதரத்தானது முகையதீனே.

ஆதியின் நாட்டமே விதியுமாகும்
அடியார் நாட்டமே மதியுமாகும்
விதியும் மதியுமே கொடுத்தஹக்கை
துகியில் காட்டிடும் கண்மணியே.

நானில்வாபதுயமைந்ததுபோல்
நாறில் இலாஹியை காட்டும்பீரே
ஆணில்பெண்ணது அமைந்ததுபோல்
அல்லாதனைக்காண நான் பிறந்தேன்.

காபுமீமுமே யொன்றாய்ப்பூட்டும்
கருணை ஆதத்தினழகைக்காண்க
கரபகௌசைனியிதுநடுவில்
கலந்த மலரது முகைதீனும்.

பூவில்வாசம்போல் பொதிந்துநின்ற
பூரணமான நாத்தல்லாவாம்
பூவாமலி பதில்புகுந்தயாரும்
புகழும் முகையதீன் தன்னைக்காண்க.

காரியக்குருசொல்லைக் கேட்டுயான்
காரணகுருவை கண்ணில்கண்டு
அறிவை யப்தாக்கி யானிருந்தேன்
ஆரிபாகிய முகையதீனே.

பூரணமானதை மனமறிய
புகழுறஹமத்தால் தியானம்பண்ணு
ஆளும்ரஹ்மானை அறிவர்ல்பாரும்
அல்லா அடியாரு மணுவில்காண்பார்.

அல்லும்பகலுமே யானினைத்து
அல்லாதனைக்காண மனமுருகி
பொல்லா இபுலீசுக் குணமகற்றி
போகும் வரும்றூஹால் புகழ்மனமே.

இபுலீஸ் ஓதாதமந்திரத்தை
இல்லெனுந் தம்மால் மனமுருகி
நபுசைகொருபான் செய்மனமே
நாயன்நாட்டம்போல் தான்கிடைக்கும்.

அவ்வல்கலிமாவில் மனதைவையும்
அணுவிலணுவதை கண்டுகொள்ள
தௌஹீதாகிய ஈமானாலே
தந்தபொருள்தை தன்னில்காண்க.

கலிமா தனிலேதான் தொழுகையுண்டு
கறுணைக்கலிமாவில் நோன்பும்உண்டு
வல்லோன்கலிமாவிற் சதகாஉண்டு
வகையாம்ஹஜ்ஜியில் நில்மனமே.

காணிக்கைவைத்தேன் னென்சிரசை
கருணைரஹ்மானை சுஜூதுசெய்வேன்
பேணித்தருவீர்கள் உஜூதுதிலே
பேரின்பமான முகையதீனே.

சுழியாம்வட்டத்தில் நின்றிலங்கும்
சுடராய்நின்றது குதுசிராஜா
ஒளிவில்லொளிவான முகம்மதுவை
உண்மைதனில்காட்டும் கண்மணியே,

ஐனில்நின்றது நூறுமாகும்
அமைந்துயிருந்தது றாஹ்மாகும்
ஐனிலணுவதை யானறிய
பயனையறிவிக்கும் முகையதீனே.

ஹக்கும்ஹல்க்குமே ஒன்றாய்நிற்க
கலந்தவாசியில் புகுந்துபார்க்க
ஒக்கஆள்வோனை யானறிய
ஓர்மைநிலைதாரும் முகையதீனே.

கலிமாவின் கோலம்நானெடுத்தேன்
கருணைபிஸ்மிலை சிரசாய்காண்பேன்
கலியும்மாவதும் வொன்றாய்க்காண
கலக்கமகற்றிடும் முகையதீனே.

அச்சதிச்சைக்கும் மிடைநடுவில்
அன்பாய்யிருந்திட அவுலியாவாம்
பக்ஷமாகிய குதுபுராஜா
பையன்முகம்பாரும் முகையதீனே.

ஆரிபீஞ்சொல்லது கண்ணாடியாம்
ஆனந்தஜெளகறை மனமறியும்
பாரில்குருசொல் விளக்குமாகும்
பாக்கியந்தந்தருள் முகையதீனே.

நபிக்கு அனந்தரக்காரரல்லோ
நலமாம்ஹுஜ்ஜத்து யில்லாஆலீம்
பஹ்முக்கடலான ஆலீமுக்கு
பணிந்துதஸ்லீம் யானுஞ்செய்தேன்.

குற்றம்மில்லாதறப்பொருவன்
குதாஅடியாருக் குற்றமுண்டு
கற்றறிந்திடும் பெரியோரெல்லாம்
பையன்பிழைகளை திருத்திக்கொள்ளும்.

பாடியவனுக்கு கருத்தேயொன்று
பார்த்த பெரியோர்க்கு பலகருத்தாம்
நாடியவர்க்கு ஓர்மையுண்டு
நாட்டிவைத்திடும் குலக்கொழுந்தே.

என்னிலும்பாவி யாருமுண்டோ
ஒன்னில்லென்னையும் கொறுபாஞ்செய்தேன்
முன்னேயான்செய்த பாக்கியத்தால்
பின்னேநபியுட உம்மத்தானேன்.

செய்பதுமுகம்மதுபாலன்யான்
ஜெம்மலிசருலின் உம்மத்தானேன்
நல்லபாதையில் முகம்மதுமுகையதீனை
நடத்திவைத்திடும் முகையதீனே.

முற்றிற்று

# உட்லறிசிந்து.

—o—

இராகம்-நாட்டை தாளம்-சாப்பு.

பல்லவி.

பஞ்சணக்காவைப் பாருங்கள்
தீனோர்களெல்லாஞ்
கன்சுல்மஃபியாவில் கண்டுகொள்ளுங்கள்

அநுபல்லவி.

அஞ்சில்அஹறதைத் தேடுங்கள்-அநுதினமும்
கொஞ்சும்அல்ஹறம்தை யோதுங்கள்

சரணம்

உச்சிமலைநேர்கிழக்காம்
உந்திமலைநேர்மேற்காம்-அது
வைத்தபொருள் வலம்புரிக்கும்
வகையான தென்மேற்காம்-இனி
இச்சைதரும் இடம்புரிக்கும்
இயல்பான வடமேற்காம்-அது

துள்ளல்

தச்சனில்லாக் கோட்டையது
தான்சன்மந்த வீடுமது
பக்ஷமுள்ள கல்புமது
பார்த்தவர்க்கு அருளுமது-அருளும்

எண்சாணுடலுக்குள்ளால்-அது
ஏகாந்தமாகவேதான் இலங்கும்பாரும் பஞ்.

கொஞ்சும் பட்சேந்திரியங்
கூடிருக்கும் லாமலிபாம்
தஞ்சமான அல்ஹம்தாம்
தனித்திருக்கு முத்துலக்காம்
விஞ்சையான கூடத்துவாம்
விளைந்திருக்கும் பீடமதாம்

துள்ளல்

காட்டுஞானக் கூட்டங்கூட்டங்
கடுவாபுலி ஓட்டம்ஓட்டம்
வாட்டமில்லா முத்தொளிவில் நாட்டம்நாட்டம்
வல்லோனைத்தானறியக் காட்டுங்காட்டும்-ஆளும்
எண்சாணுடலுக்குள்ளால்
ஏகாந்தமாகவேதான் இலங்கும்பாரும் பஞ்

அல்லாவான தஞ்செழுத்தாம்
அமைந்திருக்கும் பஞ்சேந்திரியம்-அது
ஒல்லாகிருபைகொண்டு நாமியாவாம்
உகந்துபேசுவதும் நாத்திக்காவாம்
வல்லான் தன்னைகாண
எல்லாம் அமைத்துவைத்தான்-அது

துள்ளல்

பொல்லாநாபியாவே ஓட்டம்ஓட்டம்
போகும்வரும்ரூஹால் நாட்டம்நாட்டம்
எல்லாம்மரசாளும் ஐனிடையில்
அறியக்காட்டும் குதுசிரூஹாம்-ஆளும்
எண்சாணுடலுக்குள்ளால்
ஏகாந்தமாகவேதான் இலங்கும்பாரும் பஞ்

குத்தாகநின்றதுவே நுகத்துமாச்சு
கூடியிருந்தஅலிபதுவும் வித்துமாச்சு-அது
சித்தாகநின்றதுவே மீமுமாச்சு
சேர்ந்திருந்தகோலமது ஆதமாச்சு-அது
முத்தாகநின்றதுவே ஒளிவுமாச்சு
முத்துலக்குவாசலிலே அறியலாச்சு

துள்ளல்

சுல்பானபாதையிலே கூட்டம்கூட்டம்
சூழ்ந்தவினைதானகன்று ஓட்டம்ஓட்டம்
சூக்ஷியகுதுசிதனில் நாட்டம்நாட்டம்
சூழ்ந்திருக்கும்நுபுவத்தில்காட்டுங்காட்டும்ஆளும்
எண்சாணுடலுக்குள்ளால்
ஏகாந்தமாகவேதான் யிலங்கும்பாரும் பஞ்

பச்சனிரம் பவழனிரம்
பார்த்தவர்க்கு முத்துநிறம்

ஒக்கநிறம் ஆதத்திலே
உகந்தவர்க்கு ஹக்குமாகும்
பக்கநிறம் மஹ்மூதிலே
பார்த்தவர்க்கு ஐனென்றஒளிவுமாகும்

துள்ளல்

தெளிவான பாதையிலே கூட்டங்கூட்டம்
தேடியறிந்திட நாட்டம்நாட்டம்
அழிவில்லா றஹ்மானை காட்டுங்காட்டும்
அல்லா அமானிதத்தில் முகம்மதுமுஹையதீனுக்கு
நாட்டம்நாட்டம்-ஆளுடம்
எண்சாணுடலுக்குள்ளால்
ஏகாந்தமாகவேதான் இலங்கும்பாரும் பஞ்

# இஸ்லாம் நிலை.

இஸ்லாம் சிரசது கலிமாவாகும்
இஸ்லாம்கண்ணது தொழுகையதாம்
இஸ்லாம்முகமது நோம்புமாகும்
இஸ்லாம்மனமது சதக்காவாகும்
இஸ்லாம்நாட்டமே ஹஜ்ஜியாகும்
இஸ்லாம்வாழ்வத் சபுருமாகும்
இஸ்லாம்ஹாலது ஒழுக்கமாகும்
இஸ்லாம்கையது குடையுமாகும்
இஸ்லாம்செயலது இரக்கமாகும்
இஸ்லாம்முடிவது மௌனமாகும்
இஸ்லாம்குலத்தோரே கேளுமினி
அஸ்லைஅஸ்லிலே அறியவந்தோம்
அஸ்லியத்தானதை மூமீன்காண்பார்
நஸ்லாம்குபிறது அகண்டுவிட்டால்
நாயன்நாட்டம்போல் தான்கிடைக்கும்
நஸியத்துசெய்யும் பெரியோரெல்லாம்
நல்வழியில்லென்னை கண்டுகொள்ள
வசிலாய்நின்றன்த யானறிய
வழியாம்பாதை ஐனுல்லாவாம்
ஒளிவில்ஒளிவாக நின்றிலங்கும்
உண்மைமுகம்மதே முகம்மது முகையதீனை காரு
மையா

# ஈமான் சிறப்பு.

---

ஈமான்சிரசது குருசியாகும்
ஈமான்கண்ணது ஐனுல்லாவாம்
ஈமான்முகமது குல்ஹுவல்லா
ஈமான்ஞானத்து கலிமாவாகும்
ஈமான்உயிரது தீனுமாகும்
ஈமான்உடலது இன்சானாகும்
ஈமான்கையது கயிறுமாகும்
ஈமான்ஹாலது சபுருமாகும்
ஈமான்தனக்குமே யிமாமுமென்னை
இமாமையறிந்தோரை யென்னசொல்வேன்
ஈமான்நபியுல்லா வும்மத்தோரே
சிற்றையறிந்திட்டு தன்னைக்காட்டிப்
தேமாங்கனியான பராபரத்தை
தினமுங்காணுமே ஈமானிலே
ஆமாமென்றுமே யானிருந்தேதன்
அழகாயென்னையாளும் பாறகூலே
ஈமானுடையோரே சீமானாகும்
இல்லந்தெளிந்தோரே முக்கம்மிலாகும்
பூமானைகாண்க முக்கம்மது முகையதீனுக்கு
பூரணத்தைத்தருவாய் பீர்றஹீமே.

# கண்ணின் விபரம்.

## விருத்தம்.

கண்ணதுவேஎட்டாங் கருத்துடனே யறிவதற்கு
கண்ணதுவேயொன்றும் கலந்தமதிதாலாகும்
கண்ணதுவேரண்டாம் கருணையுள்ளமீமாகும்
கண்ணதுவேமூன்றும் கலந்தபொரிலாமாமே
கண்ணதுவேநாலாங் நாட்டமுள்ளஹேயாகும்
கண்ணதுவேஐந்தாம் நூன்அலிபுநூருமே
கண்ணதுவேஆறும் மதிசந்திரன்சத்தாகும்
கண்ணதுவேஏழாம் வலம்புரிமத்தாமே
கண்ணதுவேஎட்டாம் கலக்கமற்றஹம்சாகும்
வட்டமுள்ளவடிவதிலே திட்டமுடன்றம்சாகும்
ரட்டிப்பார்க்கக்கிட்டுமது இலங்கும்நூர் ஐனுகும்
திட்டமுடன்அறிவதற்கு தெளிவான ஒளிவாமே
எண்சாணுடலுக்குள்ளால் இலங்கும்பார்ஐனுகும்
தஞ்சம்ஒன்பதாம்வாசலிலே தழுவியவட்டம்சுழி
[யாமே
பஞ்சாட்சரத்தில் பதித்திருந்தவெண்சுட்டரை
நஞ்சாவூதிப்பார்க்க நலந்தரும்வழியாமே
அஞ்சும்ஒன்றுகி அணுவணுவாய்நின்றிலங்கும்
கெஞ்சும்முகம்மது முகையுதீனுக்கு
ஒன்கிருபைபெற ஆமீன்நீயே.

# ஜன்கலிமாச் சித்து.

இராகம்-காம்போதி தாளம்-ரூபகம்

ஐன்கலிமாவும்மென்னடி-யதை
அறிந்தவர்க்குப் பயமில்லடி
ஐனுல்ஹக்குமென்னடி-யதை
தெரிந்தவர்க்குப்பலனுண்டடி
ஐனுல்லாவை நீபாரடி-யதை
உணர்ந்தவர்க்கு ஆதியாமென்றோதடி

**துள்ளல்**

ஒனது அலிபது நூனது நுகத்தி
மீமது வோயது மேவிடும் ஹாவது
நானது நீயது நாடிய ஹம்சது.
ஆதியது அணுவது அடங்கலும் உகந்தது
கோனது குறிப்பது கூடிடுங் குதுபது

முடுக்கு

பாருமே ரதந்தாருமே என்னை
யாளுமே பாவம்ஓடுமே
பாதுஷாமுகம்மதே யென்முகம்வாருமே
வள்ளலிரசூலாகத்தோணுமே ஐன்

ஐனதுக்கப்பாலென்னடி-யதை
தெறிந்தவர்க்கு குதுசியாமென்றோதடி

ஐந்துக்குள்ளாமென்னடி-அதை
அறிந்தவர்க்கு றம்சென்றுகூரடி
ஐனதில்ஆள்வதாரடி-மனமே
உணர்ந்தவர்க்கு ஷாம்சாமடி

துள்ளல்

தானது தனித்தது மானது மதியது
ஆணது பெண்ணது அமைந்தது றாஷிது
வானது வந்தது வணங்கிடுஞ் சத்தது
காணுது கருத்தது காரணப் பொருளது
தோணுது துலங்குது தாய்தான நபியது

முடுக்கு

பாருமே கதம்தாருமே மையல்தீருமே
மஹாமுதே என்னையாளுமே
வாருமேம் வள்ளலிரசூலாகத் தோணுமே ஐன்
தேமாங்கனியமென்னவடி-யதில்
தெவிட்டாப்பொருளைப்பாரடி
தேயாசமானில்நில்லடி-யதில்
மறகாத்தியானம் பண்ணடி
கனியாகநின்றதென்னடி-யதில்
காக்ஷிகாணும் மெய்யாய்ப்பாரடி

துள்ளல்

தோணுமே அருள்காணுமே
துய்தாக அதமெய்யாக

நீனுமே நினைவாகுமே
நேசமே விசுவாசமே
பூணுமே புகழில்காணுமே
ஞானமே மவுனத்தியானமே
காணுமே ஹாமீமாய்தோணுமே
வேணுமே விசுவாசமே
பாருமே மஹாமூதில்துலங்குமே

முடுக்கு

வாருமேகதம்தாருமே பயஹாம்பரே
என்முகம்பாருமே பாதுஷாமுகம்மதே என்
[னையாளுமே ஐன்

மணிமந்திரமென்னடி-அது
மன்னோன்மாமணியைப்பாரடி
தொனிமந்திரமென்னடி-அது
துலங்கும்ஹாவைக் காணடி
கனிமந்திரமென்னடி-நாம்
கலந்துவருவானதைப் நாடடி

தள்ளல்

மாமணி பூமணி மதித்திட புகழ்மணி
தாமணி தம்மணி தரித்திட திருமணி
நாமணி நவமணி நாதாந்த அருள்மணி
கோமணிக் குருமணி குலாவிய ஜண்மணி

றாமணி ஹாமணி கலந்திருந்த ஹீமணி
தீன்மணி தீனோர் புகழ்மணி

முடுக்கு

ஆமணிச்சித்து அமைந்ததுவித்து
நாமணிமுத்து நவமணிக்கொத்து
கோமணிப்பச்சை குருமணி ஆதம்
கூடிடும்வலம்புரிச்சித்தே
நாடுமே மனந்தேடுமே
நம்பியரிந்திட நல்வழியில்சேருமே
பாருமே வள்ளலிரசூலாகத்தோணுமே ஐன்

அஞ்ஞானமகற்றி நில்லடி-அது
ஆறஞ்சிலொன்றைக் காணடி
தையானைக்கண்டுகொள்ளடி-அது
தானமைந்த தலத்தைப்பாரடி
மெஞ்ஞானந்தன்னில் நில்லடி-அது
மேலொன்றஹாமத்தைக்காட்டும் வழியடி

துள்ளல்

அய்யனே மனதையோனே
ஹையுல்கையுமாய் நின்றோனே
மெய்யோனே மேலோனாய் ஆனோனே
தையானே தயாபரமானோனே
தானைச் சொண்டோனே

தாயும்தந்தை மில்லானே
காணுமே மனம்பூணுமே
வேணுமே விசுவாசமே
ஞானமே யாரஹீமைக்காணுமே
பூணுமே புகழால்பாருமே
பூரணஐனுல்லா வாகுமே

முடுக்கு

வாருமே கதம்தாருமே
பாதுஷா முகம்மதே
என்முன்நில்லுமே பாவவினையோடுமே
பதிமூன்றில் என்னைசேருமே
பயகாம்பரே முகம்மதுமுகையதீனைக்காருமே

இராகம்-பிலஹரி ஏக-தாளம்.

## பல்லவி.

என்னைவகுத்த அல்லா—நான்
என்னதான்செய்வேன்

## அநுபல்லவி

உன்னைத்தான்தேடி
உருதிஅங்கம்நாடி
என்மனம்வாடி
உருகுதேதேடி                    என்

## சரணம்

| | |
|---|---|
| அஞ்சுமே ஆரும் | அரியவேவேண்டி |
| நெஞ்சதனில்தேடி | நின்னையமாய்க்கூடி |
| அஞ்சில்லொன்றைநாடி | அல்ஹம்தால்வாடி |
| கெஞ்சிமிகத்தேடி | கிருபையதைநாடி |

(என்)

| | |
|---|---|
| ஆறுருக்குள்ளால் | அகில்லதுநின்று |
| நாறுயிலங்கும்-அது | நானவிபில்காணுங் |
| சிர்றுகநின்றேன் | ஜெகமெங்குந்தோணும் |
| துற்றதுல்லைபயிளா | துலங்கிடும்ஹூவாம் |

(என்)

ஆரணத்துள்ளா லணுவணுவாய்க்காணும்
பூரணமாகநீ புகழோனைப்பாரும்
புண்ணியர்கல்பில் புகழதுயிலங்கும்
காரணமான-மெயங்கள் ஞாமீமைக்காணும்

(என்)

எங்கெங்குந்நீணாய் யிலங்குதேபாரும்
கங்குல்பகாவில் கண்டிடகாட்சி
திங்கள்வொளிலவை தீனேரேகாண்பீர்
சங்கைபுடன்என்னுளும் சற்குருவேகாரும்

(என்)

பூரணமீமாம்-அது புகழோனின்னழகாம்
புண்ணியருன-ஜங்கள் முகம்மதின்கோலம்
காரணமானவென் கண்மணியேவாரும்
கபிபாய்வந்து முகம்மதுமுகைய நீனைக்காரும்

(என்)

# சிந்து.

இராகம்-நாட்டை தாளம்-சாப்பு.

## பல்லவி.

வாடி போகலாம் அன்னமே
வல்லோன் குதறத்தை
வணங்கிடக்காணுமே வாடி

## அனுபல்லவி.

குன்ஹுதாத்தையும் நாடடி
குன்ஹு அல்லாவைக் காணடி
அன்னென்ற அலிபு நூனைப்பாரடி
ஆதாரம்ஜனுல்லாவைக் காணடி வாடி

## சரணம்

இல்லெனும்தம்மைப் பூட்டடி
இலங்கும்நூரைநீ பாரடி
அல்லாமுகம்மதை நாடடி
வடிவான ஆதத்தில் காணடி வாடி

ஹைவான்தில் றூகாணதைப் பூட்டடி
குணமான ஈமானுல்பாரடி
[illegible]வானதில் மஹ்மூதைக் காணடி.
மாயாமல்மாய்ந்தோர் செயலடி வாடி

லாமகான் தன்னில் நில்லடி
ரகசியப்பொருளை பாரடி
தாமரையிலம்சைக் காணடி
தன்னில்லொன்னை யரியடி வாடி

இஸ்லாம்செயலிலே நில்லடி
அசுலாம்ஈமானைக் காணடி
நஸ்லாம்குபிரது அகலடி
அஸ்லெ அஸ்லில் காணடி வாடி

நூனில்நூரதைப் பாரடி
நூருமுகம்மதைக் காணடி
மானில்மதியைப் பூட்டடி
விதியால்மஹாமூதைக் காணடி வாடி

தாத்தும்சிபத்தும் ஒன்றடி
ரகசியகுதுசியைக் காணடி
ஆத்துமாருட்சியம் பாரடி
அல்ஹம்துலில்லாகியைக் காணடி வாடி

தீனோர்புகழதைக் கேள்டி
தீவினையகன்றுமே போமடி
தீதார்முகம்மதைப் பாரடி
திவ்விய அருளைக் காணடி வாடி

அணுவிலணுவதைப்பாரடி
ஆதாரம்மிகுருஜியைக் காணடி
வேதியருரைத்ததை யோதடி
வேந்தரிரசூலுல்லாவைக் காணடி வாடி

பூவில்வாசம்போல் நில்லடி
புதுமைமவுனதில் காணடி
நாவில்ஹம்தைப் பூட்டடி
நாநீயென்றதை மாற்றடி வாடி



## அகவல்.

—o—

உக்காசிலிம்பியே உச்சிமீதில்
உள்ளேநாராசம் அக்கினியாம்
ஹக்காங்குடுக்கையே கல்புமாகும்
கனலாங்குழலது பிரலிபாம்
ஒக்ககஞ்சாவும் பஞ்சேந்திரியம்
மிக்கஷைஹூருன ஷைகயுமாகும்
சக்கைநீக்கினால் ஹக்கைகாணும்
சமையஅருளதை மனமறியும்
உண்மைதன்னிலேதன்னைகாணும்
செப்பும் ஹ[illegible]ப்பது [illegible]ரப்புமீதில்
நன்மைக்கரசரை முன்னிருத்தி
பக்கம்பாராமல் விருமனமே
பாயும்கலையதை விசையைப்பூட்டும்
தர்க்கம்பேசாமல் விருந்துவிட்டால்
தானும்ஜம்ஹூ[illegible]த்தில் வாணாள்காணும்
ஹக்கில்கல்குமே ஒன்றுபட்டால்
பாயும்குதறத்து ம[illegible]பூமியிலே

முட்டவாங்கியே யூதிப்பாரும்
மூன்றும்ஒன்ருகி ப ணுவில்காணும்
பட்டகயாது ருகுமாகும்
வட்டசுழியதில் பட்டமாடும்
தொட்டுவுபதேசித்த என்குருவே
துருபாகிய ஐவ்கறுவாம்
கட்டைக்கரைசேருங் குத்துசியினல்
கசடாங்குபிரது அசன்றுஒடும்
திட்டமானது ஐனுல்லாவாம்
சட்டமாகிய சாகில்பாரும்
மட்டிலடங்காத பராபரத்தை
மதியிலறிவதும் இணையைநீக்கி
கட்டிக்கரும்பதின் யமுதம்போலே
கலந்துயிருந்தது மஹமூதிலே
விட்டுப்பிரியாமல் யிருமனமே
வினைகள்நீங்கியே விரண்டுஒடும்
கெட்டிக்கல்பாணுல் கிருசுபோகும்
சட்டிசோறுண்டு திரிந்திடாதே
சண்டைசெய்திடு நபுசளவில்
வண்டத்தனமாக திரிந்திடாதே

வண்டன்யிபுலீசை மறந்துவிடு
முண்டத்தனமாக திரிந்திடாதே
முத்திதருவதும் பக்திமீதில்
பக்தியுடனே தான் நில்மனமே
பாக்கியம்பெற்றிட முகம்மதியா
சத்திவேதத்தில் நான்பிறந்தேன்
சமைய அருளதை பெற்றுக்கொள்ள
பக்தியாகிய அடியான்யானும்
பாக்கியம்தந்தருள் முகையதீனே
முத்திபெறவேண்டி நபுசைகொருபான்செய்தேன்
முத்துலக்குதுவனிலே தன்னைக்காண்பேன்
எத்துஞ்சூரத்து ரகுமானிலே
இலங்கும்பொருளதை இணங்கமுமீன்
சித்தம்தன்னிலே சிர்ரைக்காண்க
ஜெகமெங்கும்ஆள்வோனே அடியேன்
முகம்மதுமுகையதீன் பிழைபொருப்பாய்

ஆமீன்நீயே

## குருமொழி.

லாஹூ றம்பாத்தின் மொன்றுபட
ரகசியப்பொருள் தானுரைக்க
வாஹீதிய்யத்தான எம்மிறையும்
வரிசமிஹு ரூஜி தானழைத்தான்

அழைத்தான் ஆதியும் அவனளவில்
அவ்வல்கலிபாவும் வாருமென்றான்
கொடுத்தான்ஞானம் தான்கொடுத்தான்
குதாசிற்றது தானுரைத்தான்

உரைத்தானபியேநீர் கேளுமென்றான்
அஹதும்சமதையும் அறியவேண்டி
படைத்தேன்யடியாரை யான்படைத்தேன்
பகரம்வுமதழகாய் யான்பிரித்தேன்

என்னில்பிரிந்தது கலிமாவாகும்
மண்ணிலமைந்தபின் ஆதமாச்சு
கண்ணிலமைந்தது முகம்மதாகும்
கருணையாதத்தை யான்படைத்தேன்.

வகுத்தேன் அனுசிற்றென்ற ஒளிவைக்கொண்டு
பகரமஹமூதாய் யான்படைத்தேன்
கொடுத்தேன் அமானிதப் பொருளெனவே
குல்லுமுகம்மதின் சூரத்தாச்சே

சூரத்துரமானில் நீரிருந்தால்
சுவாதுதன்னிலே யானிருப்பேன்
நாறுமுகம்மதின் பீடமானல்
நாறுல்லிலாஹியைத் தானறிவார்

நூனில்வா பது புகுந்ததுபோல்
நூறில்லிலா ஹியுந் தானமைந்தான்
பூவில்வாசம்போல் பொதிந்திருந்தேன்
புகழும்ரகுமத்தில் யெனையறிவார்.

கூறும்முகம்மதே உலகமீதில்
குல்லுமஹாமூதாய் யானமைத்தேன்
யாரும்ஐனிடை தன்னிலையில்
ஞாபகம்வைத்தால் நபிகூரத்தே.

சந்தேகமில்லா மனோன்மணியே
சார்ந்தவுலகத்தி லுள்ளபோர்கள்
பந்தம்ஒளிவாகத் தில்லுமானல்
சொந்தஅடியாரும் அவரேயாகும்.

ஹாலிக்குமஹாலுாக்கில் காலராவேன்
கருணையுடனே தான் வணங்குவோர்க்கு
மாலிக்கில் மூமீனின் தன்னழகில்
மாயசுரூபமாய்த் தானறிவார்.

பாரில்மூமீனின் கல்பதுவும்
பகரம்உமதழகாய் யிலங்குமானல்
கூறும்ஹக்கையுங் கல்கில்கர்ண
கும்பித்தடங்கினல் தம்பமாவேன்

ஹக்கைகல்க்கிலே ஜம்கூமாக்கி
ஹக்கில்கல்க்குமே பனுவாய்நிற்க
ஹக்கோடு கல்க்குமே ஒன்றுபட
ஹாமீமுகம்மதைக் கண்டபின்னர்.

கண்டால்வாய்மூடி மௌனமாக
கலக்கமகற்றியே யிருந்தபேர்கள்
விண்டுவுரைப்பது பிழைகளாகும்
விளங்குநுபுவத்தி லென்னயறிவார்

இலங்கும்பொருளது நாமஞ்சொல்ல
துலங்கும்அம்சது சூரத்தாகும்
நலங்கொள்ளீமானே யறிந்தபின்னர்
நாயன்விஹாவது சந்திப்புவாம்

இசுலாஞ்செயலிலே யிருந்துகொண்டு
அசுலாம்ஈமானே யறிந்தபின்பு
வசீலாய்நின்றதை கண்டுகொள்வார்
வள்ளல்நபியுட வும்மத்தோரே.

நன்மைதுன்மையு மறந்துவிட்டு
நானீயென்றதை யிழந்தபின்னர்
என்னிலோர்மையே வைத்துக்கொண்டு
உம்மிலென்னையுங் கண்டுகொள்வார்

அசுலேஅசுலிலே யறிந்துபார்த்தால்
அசுலியத்தான்தை யறிந்துகொள்வார்
அசுலேயறிவாலேயறிய வேண்டி
வஷிகத்துச்செய்யும் முகம்மதுவே

நன்மையானது சுவர்க்கமட்டும்
துன்மையானது நரகமட்டும்
நன்மைதுன்மையு மழிந்துபோகும்
நாயன்விஹ்ஹாவது அழிவதில்லை

புகலும்புகழ்வோர் பொன்றதாகும்
புகழும்அடியாரை யான்புகழ்வேன்
புகழையிகழாத பேர்களெல்லாம்
புகழில்காண்பாரே பூரணத்தை

இல்மில்எக்கீனிலே யறிவைப்பூட்டி
ஐனுல்எக்கீனிலே ஓர்மைகொண்டு
ஹக்குல்எக்கீனிலே ஆதாரமாய்
ஹமாலுல்யெக்கீனிலே கண்டுகொள்வார்

அடியார்மீதினில் யிரக்கம்வைத்த
அவ்வல்பிஸ்மீனே நானும்பேயுமேயாம்
அடியாருடனேதான் யுறவும்ஆடி
அவ்வல்கனியையும் அணுவில்காண்பேன்

மூமீன்மிஹுறாஜி தொழுகையாகும்
முகம்மதிரசூலைக் கண்டபின்னர்
ஆமீன்முடிவதில் அறிவைப்பூட்டி
அணுவிலணுவதை கண்டுகொள்வோம்

நம்பினேன்யானும் வுமதடிமை
நன்மை துன்மையும் யானறியேன்
அன்பருடனேதான் யென்னைநீயாள்வாய்
ஆதிறகுமானே வுனதருளால்

மாதாபிதாக்கள்செய்தபிழை
மகாபெரியவா நீபொறுப்பாய்
முகம்மது முகையதீன் பிழையகல
பார்த்திபாநீ பண்புசெய்யே

# தெள்ஹீது முநாசாத்து.

---

விருத்தம்

ஆதியின் கிருபைகொண்டு
அஹ்மதின் அழகைக்காணும்
சோதியின் நிலையறிய
சுஹாதைதிலிருந்து பாரும்
நீதியின் பொருளைக்காண
நினைவதில்மனமதுஒன்றுபட்டு
ஜாதியின் குலக்கொழுந்தே
சாகிபே யாரசூலே காப்பு,

வேறு.

அல்ஹம்து வில்லாகி
ஆலமெங்குந் தானிறைந்த
வல்லோனை யானறிய
வரந்தருவாய் ரஹுமானே.

அலிபுலாம் மீமுமாகி
அடங்கலும் ஒன்றாகி
வலிதான லாமலிபால்
வந்துதித்த காண்பேனே.

அலிபுநூனு மொன்றாகி
அடங்கிநிற்குங் கல்பதிலே
கலியுமாவை யானறிந்து
கருணைமிக பெருவேனே.

ஈமான்இசுலாம் யிலங்கும்
ஒளி தீனோர்க்கு
சீமான் முகம்மதரை
சிந்தையில் காண்பேனே.

அலிபதுவே மூன்றதாகி
அடங்கிய யணுவுக்குள்ளால்
வலிதான அம்சைக்கண்டு
வருந்திமிக காண்பேனே.

இருமீமு மொருசுழியாய்
இலங்கும்பார் ஐனடுவில்
அருள்ஹேலை முன்னிறுத்தி
அஹம்மதரைக் காண்பேனே.

ஏறுவதும் நூத்திலெட்டாம்
யிறங்குவதும் யெட்டாகும்
கூறுவதும் வாஜிப்பாகும்
கொழுகையை யறிவேனே.

ஆசை பெருவழியில்
ஆதாரம் சபுராகும்
பாசமுன்ள ஹவாலே
பணிவிடை செய்வேனே.

பூசித்தேன் மனதாலே
புகழான அல்லாவை
வாசியை யானறிந்து
வகுத்தோனே காண்பேனே.

சித்ததுவே சடப்பொருள்
சார்ந்ததிரு அணுவாரும்
உத்தகுரு அம்சைக்கண்டு
முத்தனைக் காண்பேனே.

உஜூதாக நில்மனமே
உண்மையிலே நன்மைகாண
சுஜூத்தும் சுஹூத்துமொன்றாய்
சொக்கிட [illegible]க்கை காண்பேனே.

முச்சுடரும் ஒன்றாகி
முழுமதிபோல் தானிலங்கும்
அச்சுடரைக் கண்டுயான்
அச்சமற்று யிருப்பேனே

மத்தது வைத்தானும்
மதியுடனே யான்கூட்டி
வித்தான முகம்மதுவை
முத்தாக காண்பேனே.

சார்ந்ததுவும் அம்சாகும்
சுமந்ததுவும் றாகாகும்
ஆய்ந்ததுவும் அறிவாகும்
ஐனில் ஐனைக் காண்பேனே.

மலந்திருக்கும் கல்புக்குள்ளால்
கலந்திருக்கும் ஐவ்கருவாம்
துரந்தவர் றிதயத்துள்ளால்
இலங்குநூரைக் காண்பேனே.

கருதினேன் குருமொழியால்
கவலையெல்லாம் தானடக்கி
உருகினேன் யென்கல்பால்
உள்ளத்தில்வெள்ளெழுத்தைகாண்பேனே

ஒன்னுக்குள் நானுகி
யென்னுக்குள் நீனுகி
விண்ணுக்கும் கண்ணுக்குமிடையில்
என்னுக்குள் காண்பேனே.

ஏறுவதும் நீறாகும்
யிறங்குவதும் யெட்டாகும்
கூறுவதும் அம்சாகும்
குலாவுவதை காண்பேனே.

கண்மணியும் விண்மணியும்
கலந்திருக்க வெண்மணியாம்
எண்மணியைக் கண்டு
ஈடேற்றம் பெறுவேனே

குதுசியே ராஜாவாம்
குணமதுவே மந்திரியாம்
அறிவை அப்தாக்கியான்
அல்லாவைக் காண்பேனே.

மனமதுவே ராஜாவாய்
புத்தியது மந்திரியாம்
சித்தமதை யப்தாக்கி
முத்திதரக் காண்பேனே.

காட்டும் என்குருவே
கருணை ஐனுல்லாவை
நாட்டுங் றாகுல்லாவை
நான் அறியக் காண்பேனே.

அரசி லமைந்ததுவும்
அழகான் பிஸ்மீனும்
வருசை நாலாற்றமுதம்
யானருந்தி மகிழ்வேனே.

பூட்டும் திறப்பும்புகழ்
ஒன்திரு கலிமாவில்
நாட்டம் தான்திறக்கும்
நான்நீயென்றதை காண்பேனே.

புணுபஹூ யானறிய
பகரங் கலிமாவில்
விணுகொடுத்து யெனையாளும்
வேந்தரைக் காண்பேனே.

வலத்துபுறம் முகம்மதுவாம்
இடதுபுறங் குருநிலையாம்
அலதுநடுவான் சுக்கூனில்
ஆதியைக் காண்பேனே,

முன்மீமும் பின்மீமும்
மோகமுடன் ஒன்றாகி
முன்னிலையில் ஹூவிருந்து
முடிவுதாக் காண்பேனே

இருநாத்து ஈர்அலிபும்-அது
இலங்குதுபார் இன்சானில்
அருள்ஸீனை யானறிந்து
ஐனில் ஐனைக்காண்பேனே.

உறுஜாநுசுல் திட்டத்திலே
ஓர்மைறாகில் குதுசியிலே
சுஜாதும்உஜாதும் மொன்றான
சூட்சியத்தைக் காண்பேனே.

ஹக்குங்கல்க்கும் மொன்றாகி
கலந்திருந்த சுல்பதிலே
மிக்கபெரும் பொருளொக்க
ஓர்பொருளாய்க் காண்பேனே

தஞ்சீஹா தல்பீஹா-அது
தரித்திருந்த ஆதத்திலே
மன்சீனில் வந்துதித்த
மஹாமூதைக் காண்பேனே

ஆணும்பெண்ணு மொன்றாகி
அமைத்துவைத்தான் குதறத்தினால்
பேணுங்கலியுபாவு மொன்றான
காரணத்தைக் காண்பேனே

உடலுமுயிரு மொன்றாகி
உட்கலந்த ஜோதியை
அடருமனம் மொன்றானல்
அழகாகக் காண்பேனே

உடலே குருவாகும்
உயிரே நபியாகும்
உள்கலந்தசோதி
உண்மை ஹக்காகும்

உடலே செய்காகும்
உயிரே செய்யதுவாம்
அடருமனம் கல்புக்குள்ளால்
சுடரும் குதுசியைகாண்பேனே

காண்பதுவே கண்காட்சி
காரண ஐனுல்லாவாம்
ஊனூரக்க மற்றவனையென்
உள்ளத்திற் காண்பேனே

முன்னோன் அழகும்
முதலோன் தன்னழகும்
பின்னேஓர் அழகாய்
என்னில் காண்பேனே

என்னில்ஒன்னை யிலங்கிட
மனமுருகி யானிருந்தேன்
அன்னை அஹ்மதரையான்
அடிபணிந்து காண்பேனே

சிருக்கு முழுக்கருப்பேன்
சேரும் றூகாலே
பருஹ்த்த பாதையிலே
பயஹறாம்பரைக் காண்பேனே

முன்னூறும் பின்னூறும்
மூங்கியே ஒருறூறுய்
எண்ணூரிம் லொன்னைக்கண்டு
யிடேற்றம் பெருவேனே

முன்னூறுங் கடலத்திலே
முங்கிநின்ற நூறதுவும்
தோன்னூத்தி ரெண்டாகி
துலங்குமக்கள் நாங்களானோம்

நண்ணனுவாய் நீபிரித்தாய்
நான்மயுமாய் நீயமைத்தாய்
தன்னழகாய்த் தானமைந்த
கண்ணழகைக் காண்பேனே

சத்துமத்தும் ஒன்ருகி
சார்ந்திருக்க ஜனுகி
முத்து முகம்மதரையான்
வித்தாகக் காண்பேனே

ஆசை பெருவழியில்
அஹதைை முன்னிருத்தி
வாசமுள்ள ஹூவாலே
வடிவாகக் காண்பேனே

ஒன்னழகா ஒன்மயமாய்
ஒருபொருளாய் நின்றிலங்கும்
தன்னழகாய்த் தன்மயமாய்
தாள்பணிந்து இருப்பேனே

திருவளரும் ரவணசமுத்திரத்தில்
தீன்குலத்தில் பாலகன்யான்
அருள்வளரும் சய்யது முகம்மது தவப்பால்ன்
குருவளருமுகமதுமுகைதீன் இன்சொல்வாக்யமே

முற்றிற்று

# அந்தரத்தின் அகவல்.

அந்தரத்திலுலாவுகின்ற பசுமையதை
அழகானகலிமாவால் தழைந்துகட்டி
சுந்திரலாம்மலிபு தும்புமாகும்
சூட்சியமாய் குதுபானமுளையிற்கட்டும்
சந்திரனுட் சூரியனும் புல்லுந்தண்ணீர்
சாட்சாதி ரகுமானின் கிருபையினால்
தந்திரக்காமமது கடையாலாம்
தனியவனின் கிருபையினால் அமுதம்வாங்கி
கல்பான பாண்டத்தில் பாலைவிட்டு-யினி
முத்துலக்கான அடுப்பில்வைப்பேன்
நானென்ற ஆண்மையும் விறகுமாகும்
நலமான ரூஹானி அக்கினியாம்
ஊதுங்குழலதுவே மீமீனும்
உறுதியுடன் பொருதியாய்ப் பாலைக்காச்சு
யாதுஜம்ஹூத்தி விறக்கிவைப்பேன்
ஞாபகமாய் பதமுமேபாத்திரக்கி
போகும்வரும்றூஹே வுரைமோராகும்
புண்ணியரே பாலதிலே விட்டுக்கொள்ளும்
சுழியான வட்டத்தி விறக்கிவைத்து
சத்திலே மத்ததுவைத் தானேபூட்டி
சரமான லாமலிபை கயறாய்க்கட்டி
குத்தானநுகத்தையுமே மத்துமாகும்
மணமான ஹூவாலே கடையும்போது
சித்தான மதுவெள்ளம் பாயும்வேளை
சிற்றான வெண்ணெயது திறளுங்காணும்
ஹைறான கைகொண்டு வெண்ணெயதை
கண்மணியே கமலதட்டையிலேயெடுத்துவையும்

குதுசியென்ற ஒளிவதும் பாயும்போது
குணமான வெண்ணையது வுருகுங்காணும்
நெய்யதிலே முகமதை நினைவால்பாரும்
நிசூயமாய் நிர்ணயத்தை கண்டுகொள்வோம்
ஐயமில்லா அறசூதுக்கு மேலேதானும்
அழகான குருசதுக்கும் கீழேபாரும்
மகிமையான கிந்திலீன் விளக்கைக்காணும்
விளக்கதிலே நெய்யதுவை விட்டுக்கொள்ளும்
புத்தியதை திரியாக ஆக்கிதானும்
புகலும் புகழோனும் தூண்டுகோலாம்
பூரணருஹுல்லா ஒளிவாய்க்காணும்
புகழான ஐனுல்லா கண்டுகொள்ளும்
கலக்கமற்ற றஹுமானை தன்னில்காண்பார்
துலக்கமாகும் சலாமத்து பெற்றோர்மூமீன்
முத்திதரும் முகம்மதுவை முன்னிருத்தி
முங்கநல் உஜூத்ததிலே தங்கிநில்லும்
பக்தியுடன் யென்மனமே பணிந்துபாரு
பயஹாம்பர் அருளையும் பெற்றுக்கொள்ள
சித்தமதில் முகையதீன் கிருபையுண்டாம்
சூட்சாதி சூட்சமெல்லாம் சுல்பில்காண்பாய்
சத்தியுள்ள ஆதத்தின் மக்களில் யான்சிறுவன்
பத்தமுள்ள முகம்மது முகையதீன்பிழையகலும்
ஆவலோடு ஆகிறையும் வருத்தஹுக்கே
அடியேன் பிழைபொறுப்பாய் ஆமீன்நீடய.

# இன்சான் அமைப்பு.

—o—

காப்பு:

திருவின் அழகாகி தீதார் ஒளிவாகி
குருவின் குருவாகி குல்ஹுவல்லா நூருகி
கருவின் கருவாகி ஹாமீமுகம்மதாகி
கலக்கல்இன்சான் அலாசூரத்தீ காப்பு.

வேறு.

சிர்ராய்உதித்தது முகம்மதியா
சிரப்பாய்சமைந்தது ஆதமாகும்
துர்ரதுல்பைளாவை அறியவேண்டி
துய்யரஹுமானும் தான்படைத்தான்

நூறுமுகம்மதை முன்னிருத்தி
நூறில்இலாஹி நோக்கையிலே
தோற்றும்பலகோடி அடியாரானேம்
படைத்தரஹுமானின் தத்துவத்தால்

கலக்கல்இன்சான் அல்லமஹுல்பயான்
கருணைரஹுமானுந் தானுரைத்தான்
நலங்கொள் ஈமானைத் தான்கொடுத்தான்
நல்லபாதையில் நடக்கச்சொன்னுன்,

ஆகாசமான சுக்கானுக்குள்ளால்
அடையவளைந்தது கலிமாவாகும்
வாகாய்ச்சமைந்தது ஹம்சைக்கொண்டு
வடிவுசூரத்து குல்ஹுவல்லா.

நான்யில்லாமலும் நீயுமில்லை
நீயில்லாமலும் நானுமில்லை
நானும்நீயுமே ஒன்றுபட்டு
நளினசிங்கார பொம்மையானேன்,

படைத்தான்படைப்பெல்லாம் மகிமைக்காக
மனுவைப்படைத்தானே அணுவறிய
உனைத்தாளனைத்தையு மமைத்துவைத்தான்
நினைத்தபடியெல்லாந் தான்முடித்தான்.

நாம்பிறந்தது வகையெதுக்கு
நம்மைப்படைத்தோனை யறியவேண்டி
நன்மைதுன்மையுந் தான்மைத்தான்
அமானிதப்பொருளான அறிவுதந்தான்

எழுசிபத்தால் தான்வகுத்தான்
வலேலோசிங்கத்தின் வாகனங்காண்
ஆளும்ரஹுமத்தால் அடியானுனேன்
அடைக்கலமானேன் மகுழுதிலே

சத்தில்சடப்பொருள் ஒன்றுபட்டு
சத்திசிவனென்ற நாமங்தொட்டு
சித்தில்வித்தது நின்றுகொண்டு
முத்தாயமைந்ததான் சிர்ருதமே.

ஆருருக்குள்ளா லணுவில்வந்து
ஆதாரமூான காக்ஷிதந்து
நூரும்பிரவியே இசுக்கில்நின்று
அதுநூறுமுகம்மது கோலமாச்சு.

சுரூபமெடுத்தது ஐனுல்லாவாம்
சுடராய்நின்றது குதுசிராஜா
உருவமெடுத்ததும் ஆதமாகும்
ஒக்கஅமைந்துதே குதரத்தாலே.

கொண்டகோலத்தில் யெக்கூனுங்கூடி
கோமானறுசிலே முளக்கமாக
கண்டகாக்ஷியே நூர்ஹமாகும்
நின்றகோலமே ஐனுல்லாவாம்.

இரங்கும்பார்தையே முதுகந்தண்டாம்
இல்லெலுங்தம்மா லெழுந்துவந்தோம்
சுரங்கமாகிய கல்புக்குள்ளால்
சுடரைக்கண்டுமே யானிருந்தேன்.

முன்னூறுங்கடலிலே யானிருந்தேன்
முகம்மதிரசூலின் கோல்மானேன்
முன்னூரும்பின்னூரும் ஒன்றுபட்டு
தொண்ணூற்றுராகத் தானமைத்தான்,

மகாமன்மஹ்மூதின் தானம்வந்தேன்
மதியால்தழுவியே அமீரைக்கண்டேன்
அமீரில்மூமீன் கோலங்கொண்டேன்
அல்லாவாகநம் அடியாராமே,

கஃபாவாசலில் யான்புகுந்து
தௌபாநிலையதைக் கைப்பிடித்து
ஜௌஹறுகிய ஒளிவேராஜா
சரமாம்நாலாவி துணையாய்க்கண்டேன்.

கலிமாவின்கோலம் நானெடுத்து
காவிகுல்மகுலூகில் காக்ஷிபெற்று
கலியுமாவதை சுமந்துகொண்டு
கருணைரஹ்மானை வணங்கவந்தேன்.

மயங்கியிருந்தேனே கருக்குழிக்குள்
மாதாபிதாவைப்போல் கோலங்கொள்ள
தாயுங்காயுமான யெம்பிரையோன்
தங்குங்கோட்டையும் நாமுமானோம்.

நிரையவிளைந்துமே யிருக்கையிலே
உலையிலிட்டதின் மெழுகதுபோல்
சிலையைக்கீரியே சிலைபிறக்க
அலைஹிம்மானது அழைத்துதையா.

கன்னிக்குடமது உடைந்தபின்பு
கன்னியர்மனமெல்லாந் தான்கலங்கி
வெந்நீர்முன்னிலே நின்றுகொண்டு
என்னையழைத்தோனே அறியவந்தேன்.

ஹூவைத்தேடியே யானிருந்து
பின்-குவாங்குவாங்கென்று கூரலுற்றேன்
குதாஅருளது விளைந்ததினால்
கூடியுலகத்தில் தான்வளர்ந்தேன்.

பாலனய்யானும் யிருக்கும்போது
பாங்காகலமீதில் நாதன்நின்று
நூரைநோக்கியே யானிருந்தேன்
நூருமுகம்மதின் வாகனமாம்.

முகம்மதுநயினாரின் பாலகராம்
செய்யதுமுகம்மது யெனதுதந்தை
பாலன்முகம்மது முகையதீன்பிழையகல
படைத்தாகுமானே நீபொருப்பாய்.

# இருதய ஒளிவு:

வேறு.

இலங்குங்கண்ணுடி ஐனிடையாம்
இருதயக்கனி லாமலிபாம்
இலங்குவாசியை சுழித்துவாங்கு
இரசூலுல்லாவின் சூரத்தாகும்
உரங்கிஉரங்காமல் யிருமனமே
ஒன்றுபடுத்தியே யிருந்துபாரு
அறஞ்சேர்தவத்தாலே யெனைப்படைத்தான்
அல்லாதனைக்காண நான்பிறந்தேன்

மூமீன்கல்பது கண்ணுடியாம்
முகம்மதிரசூலின் சூரத்தாகும்
ஆமீன்முடிவதி லிருந்துபாரு
அஹதுசமதையும் அறியவேண்டி
ஹாமீன்ஐன்ஷீன்காபா லெனைபடைத்தான்
கிருபைரகுமத்தா லெனைவளர்த்தான்
மூமீன்குலத்தோரே தங்களுக்கு
முஸ்தபாநபி ஷபாஅத்துண்டு.

மனமானவீட்டிற் பகுமுபசியாத்தும்
சித்தம்முழிப்பாஞ் ஜெயம்பெறுவோர்க்கு

பத்தமுடையோருக்குப் பணிவிடைமௌனம்
நித்தம்புகழுதற்கு நினைவுதனித்திருக்கும்
ஆத்திவேதத்துடையோரே அறிவுசபுரும்
நித்தமும்புத்தி நிர்ணயத்தைத் தானறியும்
சித்தமேசிர்ரில் ஜெயம்பெறமூமினும்
எத்துங்குரத்துரகுமானிலிலங்கும்பார்என்மனமே

நாவேதஸ்பீகு நாடடமேகையாம்
ஆவலேவுறுட்டுந்தியா அழகாக
காவலேதீனுங் கசடணணுகாமல்
ஏவல்விலகலெல்லாம் ஏகாந்தம்
அகமியமேகல்பாம் ஆதாரம்றூஹாம்
அனுவதுவே கனியானகாட்சி
தொனியதுவே ஐனில்சொக்கும்
துலங்கும்பொருள்து ஹாமீமாம்.

மாமாகைவிஞ்சையதை மனதில்மாற்று
மாதாவின்யமுதமது உங்கணுடி
தாய்மாமன்கைபிடித்து தழுவிநின்று
தாயுஷ்டயஅமுதமதை உண்டுகொள்ள
பேமாமன்என்னைவிட்டு அகன்றுவிட்டால்
பெரியவனின்அடியாரில் யாரொருவன்
ஆமென்றுயிருந்துநீ நினைவைப்பாரு
அல்லும்பகலற்ற எல்லையிலரிய மூமீன் .

இரத்தமோடியதானமெல்லாம் நீசனின்வீடாகும்
சுத்தமுள்ள யெலுகையிலேசுந்திரர்முகம்மதியா
நித்தம்பாவமே நீசனுக்காளாக்கும்
முழுக்கும்சிறுக்கும் சின்ஜில்ஷைத்தானும்
பத்தம்முடையவர்க்குப் பணிவிடையே றாஹாம்
முத்தனைபுகழ்வோர்க்கு முழுக்கும்சிறுக்கும்தான
சித்தம்புத்தி நிர்ணயத்தைத் தானறியும் [கலும்
பக்தியுடனேயிருந்துபார்த்துக்கொள்என்மனமே

எல்லாமவனென்று எண்ணிடாதே
எவல்விலகலு மெவனுக்கினி
எல்லாமவனாக யிருந்துவிட்டால்
எமனும்வந்துதான் வுயிரும்போமோ
பொல்லாஇபுலீஸ் மாய்கையெல்லாம்
புகழும்றகுமத்தால் அழிந்துபோகும்
இல்லால்புகளுநீ அல்லாவைத்தான்
புகலும்புகழோனும் ஒன்றாய்க்காணும்

கெடியைசெய்தவன் கெடிக்குள்ளுண்டோ
மதியைக்கொடுத்தவன் மஹமூதிலே
துதியாம்கெடியதை முடித்துப்பாரு
துலங்கும்ஒளிவது நபிசூரத்தாம்
மதியால்தழுவுநீ என்மனமே
மாயாமல்மாய்ந்துநீ மகிமைகாணும்
கெதியேநீயென்று யிருந்துபாரு
கிருபைறகுமத்தை முகம்மதுமுன்கையதீனுக்கு
[தந்தருள்வாய்

# ஜ்னுல்லா பாட்டு.

இராகம்-நாட்டை தாளம்-சாப்பு.

வேறு.

பூவினில் வாசம்போலே
பொதிந்திடுந் தாத்துல்லாவாம்
மாவினிற் கலிமாவாகி
மஹாமூதான கண்ணாடிக்குள்
ஆவினில் மீமாய்நின்ற
அசுலியத் தறியவேண்டி
நாடிடும் கல்புக்குள்ளால்
நாட்டமே றூஹாமாகும்
ஹூவினில் நிறைந்தசித்து
குதுசியே ஜனுல்லாவாம்.

தாத்தது சிபாத்துமாகி
தசித்தது அம்சுக்குள்ளால்
சிபாத்தது முகம்மதியா
சிறப்பது ஈமானாகும்
காத்தது கருவைத்தேடும்
காரணஹூவை நாடும்
சூஸ்திர மூன்றுமொன்றாய்
சொக்கிடத் தன்னைக்காணும்

ஆத்துமாவில் நிறைந்தசித்து
ஆளும் ஐனுல்லாவாம்

முத்தது வித்துமாகி
முச்சுட ரொன்றுமாகும்
சித்தது மீமுமாகி
சிறப்பது ஆதமாகும்
குத்தது நுகதுமாகி
குல்ஹூவல்லா தானுமாகும்
வித்தது சிற்றுமாகி
விளங்கும்பொருள் மூமீனதும்
மத்ததில் நிறைந்தசித்து
வழங்கும் ஐனுல்லாவாம்

கண்ணின் மணியுமாகி
கல்பினிற் கனியுமாகும்
விண்ணினில் லொளிவுமாகி
விளங்குபொருள் அம்சமாகும்
என்னிலும் நீயேயாகி
இலங்குநூர் தானுமாகும்
முன்னிலே அழகுமாகி
முளைத்தது மீமாய்நின்று
தன்னிலே நிறைந்தசித்தை
தழுவினேன் ஐனுல்லாவாம்

ஒன்றுக்குள் ளொன்ருய்நின்று
உலாவுவதும் நீயேயாகும்
வண்டுக்குள் வாசியாகி
வடிவது மீமாய்நின்று
பண்டுக்குள் பணியுமாகி
பகரமே அம்சமாகும்
கண்ணுக்குள் மணியுமாகி
காணுவது றூ ஹ் மாகும்
கண்டுகொள் ளென்மனமே
காணும் ஐனுல்லாவாம்

நுகதது அலிபுமாகி
நாரதில் நானேக்காட்டும்
வகுத்தது ஹேயும்மீமாம்
வடிவது கலிமாவாகும்
கொடுத்தது அமானிதமாம்
குலாவுவது அறிவுமாகும்
எடுத்தது ஆதமாகும்
இலங்கும்பொருள் சிற்றுமாகும்
பகுத்தறி வுடையோரெல்லாம்
பார்ப்பது ஐனுல்லாவாம்

மத்தது சத்துமொன்ருய்
மகிழ்வது றூ ஹ் மாகும்

முத்தது வித்துமொன்றாய்
முளைத்தது நூறுமாகும்
சித்ததிர் சிற்றைப்பூட்டி
சிந்தையில் அறிவைநாட்டும்
பத்துமே கல்புக்குள்ளால்
யாக்கியர் முகம்மதுவாம்
எத்துஞ்சூரத்தது ரஹ்மானில்
இலங்கும்பொருள் ஐனுல்லாவாம்

அலிபது மீமாய்நின்ற
அசுலியத் தறியநாடி
வலியவன் ளொளிவைக்காண
வழியது தீனுமாகும்
அரியவன் தன்னைக்காண
அணுவதி லாதமானேன்
பெரியவன் கிருபையாலே
பேசினே னிப்பொருளை
அறியவே நான்பிறந்தேன்
ஆமீனே ஐனுல்லாவாம்

நுண்ணணுவாய் நுட்பொருளாய்
நுன்மயமாய் நின்றிலங்கும்
அண்ணணுவா யரும்பொருளாய்
அமையாப் பெருவாழ்வாய்

## ஆரிபீன்மாலை முதற்பாகம்

உன்னழகா யுன்மயமாய்
ஒருபொருளாய் நின்றிலங்கும்
என்ன்ழகாய் யென்மயமாய்
இலங்கும்பொருள் முன்னழகாய்
தன்னழகாய்த் தன்மயமாய்
தரித்தது ஐனுல்லாவாம்

எறுவது நீத்தியெட்டாம்
இரங்குவது யெட்டாகும்
கூறுவது வாஜிப்பாகும்
கொள்கையே முஸ்தஹபாம்
நாடிப்புகழ்வோர்க்கு
நாயனின் கிருபையுண்டாம
தேடியரிவோர்க்கெல்லாம்
தெளியவே மஹபூபியா
பாடித்துதித்தேன்யான்
பலந்தரும் ஐனுல்லாவாம்

சுழியது வட்டத்துள்ளால்
சொக்கிட றாகுல்லாவாம்
வழியது வுறுஜானுசுல்
வளைகயது சுல்புமாகும்
தெளியவே ஈமான்கொண்டேன்
திறவுகோல் பிஸ்மீனுகும்
அறியவே நான்பிறந்தேன்

அனுவதில் ஆதமானேன்
துறந்தவ ரிதயத்துள்ளால்
துலங்கும்பார் ஐனுல்லாவாம்

அஞ்சோடே அஞ்சுமொன்றாய்
அடங்கலும் வீசிநிற்கும்
நஞ்சரக் குபிரையோட்டும்
நல்வழித் திக்கீறைக்காட்டும்
கொஞ்சுமே அஞ்சுமொன்றாய்
குல்ஹுவல்லா தன்னில்க்காணும்
தஞ்சமே ஐம்பத்தொன்றில்
தந்ததை யறியவேண்டி
நஞ்சர வூதிப்பார்க்க
நலந்தரும் ஐனுல்லாவாம்

தூலமானது காபராகும்
துய்யவுயிரது இஸ்லாமாகும்
கோலமானது கலிமாவாகும்
கொழுகியிருப்பது ஈமானாகும்
பாலங்கடத்துமே நபிசிர்ரது
பாக்கியம்பெத்தோர் நபிசூரத்தாம்
ஆலமடங்கலும் ஒனதழகாம்
அஹதாம் ரஹுமானையான்றிய
கோலமில்லா பராபரமே
கொழுகை ஐனுல்லாவாம்

மஹ்ஷூதாகிய கண்ணாடிக்குள்
மதியாப்பொருள் தாத்துமாகும்
மூமீனாகிய பெரியோரெல்லாம்
முன்னவன் தன்னைக்காண்பார்
ஷூமீன் ஐன்ஜீன் ஹாபால்
இரையவன் யென்னைப்படைத்தான்
ஆமீனாகிய முடிவதிலேஅல்லா
அமானிதப்பொருளை யமைத்துவைத்தான்
ஹாமீமாகிய முகம்மதுவே
காணும் ஐனுல்லாவாம்

முகம்மதாகிய நாவிலிரண்டை
மூலக்கருவொன்று சாத்திற்பூட்டு
நன்மையாகிய நூற்றியெட்டை
நலமாம்ரூகிலே தழுவிக்கட்டும்
செம்மையாகிய அஹமதுவை
சிற்றுயிமானு லறிந்துபாரும்
தன்மையாகிய பெரும்பொருளை
தன்னிலையில் லறிந்துநில்லும்
செம்மையாகிய யென்மனமே
சிந்தையில்நீபார் ஐனுல்லாவாம்

எட்டோட எட்டைப்பூட்டும்
எழிலடி பாதங்காண
விட்டகுறை தொட்டகுறை

கிட்டவந்து எட்டிடவே
வட்டச்சுழியதிலே
வடிவானஅம்சை நானறிய
முட்டவாங்கி வூதிப்பார்கக
முத்துலக்கு தன்னைக்காணும்
திட்டமான மஹாமூதிலே
தெளிவான ஐனுல்லாவாம்

முன்னூராங் கடலதிலே
முங்கிநின்ற நூரதுவும்
தொண்ணூற்றி ரெண்டாகி
துலங்குமக்கள் நாங்களாகி
யென்னூரும் ஒன்னூரும்
யியம்புவோம் முன்னிலையில்
முன்னூரும் பின்னூரும்
முங்கால் உஜூதிதிலே யானறிய
தங்குமுகம்மது முகையதீன்
ஒன்தாள்பணிந்தேன் ஐனுல்லாவாம்

முற்றிற்று

# காதல் அறிவு.

இராகம்-சாவேரி தாளம்-ரூபகம்

பல்லவி,

காதலாகி யானும்வந்தேன்
என்றன் கவலைநீக்குவீர்

அநுபல்லவி.

திருகத்தனின் மத்தன யுத்தமான
கருணை நன்னபியே

சரணம்

ஆரணவொளிவி லஹமதுவதனால்
அனுவதிலானவராம்
பூரணவொளிவிற் புகழோனைக்காண
ஐனதிலானவராம்
உன்னையறிந்திட எவரும்வுள்ளமை
தெளிவதுங் கடமை
எமனிநின்மிடிமையைபொடிபொடித்திடவே

துள்ளல்

கவிமாவிலானேன்
மஹாலுக்கிற்கானேன்

பலமான ஈமானே
பேசும் இசுலாமே
பேருபெற்ற யாசீனே காசீமே

வேறு

ஞானதுஅலிபில் நுகத்ததுஅதனுல்
நூரதிலானவராம்
காணுதுமீமில் கல்குடன்காண
காட்சியி லானவராம்
தன்னையறிவதும் யெவரும்
ஒன்னிலை யறிவதுங்கடமை
நானென்ற மிடிமையை
பொடிபொடித்திடவே

துள்ளல்

கலிமாவிலானேன்
மகஅத்துசிதுமில் காணேன்
பெலமான ஈமானை
நலமா யறிவேனே
எங்கும்புகழ்பெற்ற யாசீனே ஹாசிமே

வேறு

ஆவது ஹறூபில்
அணுவது அதனுல்

ஷுஃயதிலானவராம்
மாவது கலியில்
மஹ்ஷறைதக்காண
லாம்மகானி லானவராம்
கலியை யறிந்திட
எவரும் மாவதிலறிவதுங் கடமை
இணையினின் மிடிமையைப்
பொடிபொடித்திடவே

துள்ளல்

மஹ்ஷறதிலானேன்
மயங்காமற் காணேன்
மலையாதே ஈமானே
பிழைத்தது இசுலாமே
நலமா யறிந்தேனே
நம்பு முகம்மது முகையதீனுனே

## அக்வல்.

அஹதது வுஹதுமாகி
அடங்கலும் அவனுய்த்தோணும்
சமதது வொளிவுமாகி
சாந்திட அணுவுமாகும்
அழகது கலிமாவாகி
அறிந்திட யின்சானாகும்
வகுத்தது நீனேயன்றி
வல்லவ ரொருவரில்லை
பகுத்தறி வுடையோரெல்லாம்
பார்ப்பது அம்சின்கோலம்
தொடுத்தது அமாவாவாகும்
துலங்கிடும் ஐனின்னூடே
கொடுத்ததை அறிந்துபாரும்
ஹூல்ஹூவல்லா சூரத்தாகும்
பத்துமே யிஸ்க்குமீரி
பேசிட அல்லாவாகும்
அடுத்துமே அறியவந்தோம்
ஆதத்தி னழகாய்க்காண்போம்
எடுத்துமே நடப்போர்க்கெல்லாம்
ஏகனின் றகுமத்துண்டாம்

திருவதுஷிபாத்துமாகி
திரண்டிட ஒளிவுமாகும்

அருளது நூறுமாகி
அமைந்திட அறுவ்டமாகும்
பொருளது அஹமதாகி
புகழது முகம்மதாகும்
கருவது தீனுமாகி
கலந்தது சிற்றுமாகும்
குருவது அசுலுமாகி
குலமது ஆதமாகும்
உருவது இன்சானாகி
உலாவுவது ஜனின்னூடே
ஜீனது சிற்றுமாகி
சிரப்பது பிஸ்மீனாகும்
மானது மதியுங்கூடி
மஹ்மூதின் னழகேயாகும்
ஆணது பெண்ணுங்கூடி
அணுவதில் நாமுமானோம்
தாராதர மாகவந்த
தனியோனே யாறஹீமே

குத்துட னுகத்துமாகி
கூடிடுஞ் சுக்கூனுமாகும்
வித்துட னலிபுமாகி
விளங்கிட அம்சுமாகும்
சித்துடன் மீமுமாகி
சேர்ந்திட ஐனுமாகும்

ருத்துடன் வொளிவுமாகி
முளைத்தது ஷுஊவுமாகும்
சத்துடன் சடப்பொரு ளொன்றுபட்டு
சார்ந்திட இன்சானுனும்
மத்துடன் பேயும்மீமும்
மதியிலே பூட்டிப்பாரும்
வித்துடன் ஹேயுங்கூடி
விதியிலே றாஹுமாகும்
கொத்துடன் முத்துலக்காங்
கூடியிருப்பது ஊக்குமாகும்
கற்றது அறிவுமாகி
கலந்தது ஈமானாகும்
உத்ததை அறிந்துபார்க்க
முகம்மது முகையதீனை யாளுமையா
ஆமீன்நீயே.

# மெய்ஞ்ஞானக் குறவஞ்சி.

—✱—

காப்பு:

வேதியறிரகூலுல்லா விளங்கமன அங்கம்
நீதிநெறியுள்ளவர்க்கு மாமனமே சிங்கம்
சோதியுரைவந்த அங்கச்சிங்கமெனச் சொல்ல
ஆதிபெரியோனே அருள்பெற காப்பு.

சிந்து

ஆரீபில்லுஜ் ஜூதத்தை யறிவாய்க்கேளடி-அங்கம்
அது-நாடியபோதெல்லாம் நாட்டத்தைக்காண்பா
[யேசிங்கம்

தவஞ்செய்யுந்தலத்தை தன்னிலறிவாயே-அங்கம்
தரிக்குமிடமது கல்பத்துல்லாவே-சிங்கம்

குறுன்முழுதுங் குறைவரஓதடி-அங்கம் அது
குதரத்தாகவொரு நொடிக்குள்ளாலே-சிங்கம்

நாலாயிதந்தன்னை, நலமாயறியடி-அங்கம் அது
மண்ணீர்மருத்தழல்சதக்காகொடுப்பாரே-சிங்கம்

எழுநரகவாச லியல்பாயடையடி-அங்கம் அ
குஃரத்தானதைநீ கூட்டிபூட்டடி-சிங்கம்

பாலங்கடக்கநீ பண்புடன்நில்லடி-அங்கம் அ
உன் தூலத்துக்குள்ளாலே துலங்கும்பாருநீ சிங்கம்

ஹக்கையறியநீ கல்க்குடன்காணடி-அங்கம் அ
மிக்கபரவெளி மேலோனைக்காணலாம்-சிங்கம்

தன்னையறிகிற தந்திரமென்னடி-அங்கம் அ
ஒன்னில்லென்னை நபில்செய்தாக்கால்-சிங்கம்

தந்தஞ்சிறசது தனக்குஅரசாகும்-அங்கம் அ
மங்காமீமது வழங்குங்கிரீடமே-சிங்கம்

ஜலால்ஜமாலென்ற சமைந்தகுண்டலம்-அங்கம்
கமாலியத்துடையோர்கள்பலவிதஞ்சொல்லுவார்
[சிங்கம்
பூநூலானபூரணமென்னடி-அங்கம் அ
புகுந்துநடக்கின்ற லாமலிபாகுமே-சிங்கம்

அங்கருசட்டையை அறிவாயுரையடி-அங்கம் அ
சரஹாங்சட்டையை உரவாய்பூண்டதே-சிங்கம்

கங்கணமானதைஎன்னதான்சொல்லலாம்-அங்கம்
கயிரியத்தானது கங்கணமாகுமே-சிங்கம்

நடுகச்சையானது யாரென்றுசொல்லடி-அங்கம்
தௌபாவாளாகும் துலங்கும்பாருநீ-சிங்கம்

காலின்றுசொன்ன காரணமென்னடி-அங்கம்
உன்-தாலத்திலுயிராகி வழிவழிவந்ததே-சிங்கம்

வெள்ளிகபுசதை விளங்கவுரையடி-அங்கம் அ
நாம்பிழைக்கும்ஆலமே வெளியாய்ப்போகுமே-சி

தங்கக்கபுசதை தயவாய்உரையடி-அங்கம் நாம்
தங்கும்ஆலமே மகுசருகுமே-சிங்கம்

எழுத்தாலும்சொல்ல இசைந்தவன்யாரடி-அங்கம்
வழுத்தவொண்ணு இளவாலிபமாகுமே-சிங்கம்

ஒன்றில்அடங்காமே வுகந்துபாரடி-அங்கம் அ
ஓதும்மந்திரம் யார்சொல்லுவார்-சிங்கம்

பேச்சில்மூச்சினில் நின்ற பெரும்பொருள்என்
[னடி-அங்கம்
காட்சிகண்டால் காரணமாகுமே-சிங்கம்

[ம்
வாய்ஞானம்பேசி வகைகெட்டுப்போகாதே-அங்க
தாயாரைக்கண்டுநீ தாள்பணிந்துநில்லடி-சிங்கம்-

அங்கமும் சிங்கமும் மென்னத்தைச்சொல்லலாம்
[அங்கம்
சிங்கமும் உயிருகும் அங்கமும் உடலாகும்-சிங்கம்

உடலேயும்உயிரையும்யாரென்றுசொல்லடி-அங்கம்
உடலேகுருவாகும் உயிரேநபியாகும்-சிங்கம்

இயம்புங் கவிதனில் லெதும்பிழை யுண்டானுல்-
[அங்கம்
இன்சொற் பெரியோர்கள் கண்டாற்பொருப்பார்
[கள்-சிங்கம்

படித்தவர்கேட்டவர் யாபேரும்வாழ்க-அங்கம்
சொன்னமுகம்மது முகையதீன்மஸ்தான் வாழ்க
[ஆமீன்-சிங்கம்

# நினைவு·மாலே.

இணையில்லாச்சோதி யேகாந்தமாம்
இறையை யறிகிறபாதையிலே
இணையாம்மஹாமூது கண்ணாடிக்குள்
இணங்கிப்பார்த்தாக்கால் இறையைக்காட்டும்
துணையாமுகையதீன் தன்னைக்கண்டு
தூதரிறசூலின் சூரத்தென்பேன்
முனையாஞ்சுழியிலே மனதைப்பூட்டி
துதித்தேன் யாறப்பல்லாலமீனே
அணையாம்ஆதத்தில் யான்புகுந்து
அறுத்துசமத்தையும் அரிமனமே.

இணையறவணங்கு எழுத்தறவோது
இணையில்லாறப்பை யிணங்குதற்காய்
கணையில்அம்பைக் கலந்ததுபோல்
காரணனைக் கலந்திருப்பதுவு மவுனம்
இணையதைமாற்றி இரையதைப்போற்றி
இரைபாதம் சேரலாம் என்மனமே

சுழிமுனையறிந்து சுஹாறுதுநிலெதரிந்து
சுந்தரர் முகம்மதுவையுகந்து
பழுதில்லாநாயன் முழுதுமேயமைத்த

பகாமஹா—மூதில் தெரிந்து.
அழுதுமே தொழுது அமானித்தைக்கொடுக்க
அதபுடன்புகழ்வாய் யென்மனமே

சிறுக்கதைநீக்கி சிறப்பதைப்போற்றி
சிந்தைகுலுற்
சிர்றுனபர்தை சிறப்பதுசமான்
சித்தான லாமலிபாம்
துர்ரதுல்பைளா துலங்கிடும்பாரு
துய்தான முத்துலக்கில்
அற்றபீக்குல்அகுலா அறிவதுமனமாம்
ஆதாரம் பதிமூன்ரே

வந்ததையறிந்து வகையுடன்புகழ்ந்து
வல்லோனைக்காண
போனதுஹா—வாம் புகுந்தது நூறும்
புகழதுதாத்தை
நந்தியைபறிந்து நாயனைப்பணிந்து
நாடினோர்சீமான்
அண்டியவேதம் அழகதுசமான்
அறிந்துக்கொள் ளென்மனமே

நாடியமனமே நானென்றதை
நீக்கிநபுசதை யறிய

கூடியஹா·வை குணமுடன்கூட்டி
கூடிடும் வலம்புரிச்சங்கே
ஆடியஹாவே அமைந்ததுசித்தே
அறிந்திட மூமீன்
தேடிய அம்சில் தெளிவதுநாரும்
தெரிந்துக்கொள் ளென்மனமே

காரணக்குருவே குலந்ததுகுதறத்
கண்மணியான அருளே
ஆரணவொளிவே யமைந்ததுதாத்தை
அணுவதில் காண்பேன்
பூரணவொளிவே புகழதில்பாரும்
புண்ணியனைக் காண்க
காரணமாகக் கண்டுநீதொழுவாய்
ஷாமீமாய்க் காணும்
தோரணஜனில் துலங்கும்
இலங்கும்பார் என்மனமே

யாஹா·வென்று ஞாபகமாக
யாதுதனில் யான்பூட்டி
யாஹையல் கையுமாய்நின்ற
பொருளைக்கண்டு தெளியநாடி
ஐயமில்லா மனேன்மணிதன்னை
ஐனதில் காண்பேன்

தைய்யூபான தனியோனைக்காண
தனித்திருப்பாய் என்மனமே

முத்ததுவித்தாம் முளைத்ததுசத்தாம்
முச்சுடரு மொன்றாகி
குத்ததுநுகத்தாங் கூடிடுஞ்சுக்கூனும்
குன்பயெக்கூனில் காணும்
சித்தது ஹம்சாம் சிறப்பதுகலிமா
சிந்தையை யொன்றாக்கி
பெற்றதுஈமான் பிழைத்தது இஸ்லாம்
பிரியமாய் நில்மனமே

ஒன்றதுஒன்றும் உகந்திடபிரண்டாம்
வுதித்தது மூன்றே
நன்றதுநாலாம் நயந்தத்திஐந்தாம்
நலந்தரும் ஒன்றே
வண்டதுவாசி வருந்துவார்பூசி
கண்டது காட்சி
நின்றதுசோதி நினைத்ததுநீதி
நிர்ணயங்கொள் ளென்மனமே

நாலாளஞ்சுமையை நலமுடன்நடத்தும்

நயனக் கண்ணுடி

நூருனபியை நூரதில்காட்டும்

நூன் அலிபுக்குள்ளால்

பாலனைக்காரும் முகம்மது முகையதீன்

பாவவினை தானகல

கோலமான கோலத்தில்

நின்றிலங்கும்

குல்ஹுவல்லா

காவல்நீயே

# மனதின் அகவல்.

துனியாமிதனிலேயே அனியாக்கடலிலே
ஆதத்தைவிழுங்கி ஆசையாலுலாவுதையா
ஆதத்தின்மனமதிலே அழகானதீனும்
தீனின்மனமதிலே தெளிவானமுகம்மதியா
முகம்மதின்மனமதிலே முத்திபெறஅஹமதுவாம்
அஹமதின்மனமதிலே ஆதியின்தன்னழகாம்
மனமதுவேநாலா மதியுடையோர்தானறிவார்
சினமிகுந்தமனமே செப்பாமல்தானடக்கு
நானென்றமனதை நாடாமல்தானெடுக்கு
நீயென்றஃடனிதில் நிண்ணயங்கொள்வாய்
ஆணென்றும் பெண்ணென்றும்
அறிவாலறிவாய் யென்மனமே.

# சிந்து.

—o—

இராகம்-நாட்டை தாளம்-சாப்பு.

பல்லவி

மனமேநீ சும்மாயிரு
மாயப்பிரபுஞ்சம் மாற்றிப்பாரு ம

அனுபல்லவி

தோணும்அணுவது ஐனதில்பாரு
துலங்கும்றேயது மீமதில்காணும் ம

சரணம்

நானென்றமனமது நாயனுக்குப்பகையாகும்
நாடாமல்நாடியே நம்மிலறிந்திடு
நீனென்றமனமதில் நிண்ணயங்கொண்டிடு
நேசம்வைப்போர்க்கு நிச்சயந்தெரிந்திடும் ம

ஆங்காரமனதையறிவாலகற்றிடு
ஆனந்தமனமதில் ஞானமேதங்கிடும்
ஓங்காரமனதை யுள்ளேயடக்கிடு
ஒன்றுக்குள் ளொன்றதை யுகந்துஅறிந்திடு ம

தீங்கானமனதை தில்லில்மாற்றிடு
தீன்தீன்முகம்மது தெளிவாய்யிலங்கிடும்
வாங்காமல்நின்றுக்கால் வடிவாதுலங்கிடும்
ஏய்க்கும்நாபியாயென்னை விட்டகண்டிட ம

பூரணமனமதில் புகழோனைக்கண்டிடு
புண்ணியர்கல்பினில் புகழதுநிறைந்திடுங்
காரணமனமதில் ஹாமீமாயிலங்கிடுங்
காணுமல்காண்கவே காட்சியாய்நிறைந்திட ம

ஆரணமனமதி லஹததுநிறைந்திடுங்
ஐம்பதீதோரட்சரம் ஹம்தில்துலங்கிடும்
மாரணமனமது மாயாமல்மாய்ந்திடும்
மாயசுரூபமாய் மஹாமூதில் விலங்கிடும் ம

தீனென்றமனமதில் திக்கிரதுமுழங்கிடும்
திடுக்கமேநீங்கியே தீதாரைக்காட்டிடும்
மானென்றமனமதில் வடிவாயிலங்கிடும்
வாக்குமனதால் தாக்கும்ஹம்சது ம

முகம்மதென்றமனமதில் மூச்சுடரிலங்கிடும்
முத்துலக்கானதை மூமீனேகண்டிடும்
அஹமதுமனமதி லானந்தம்நிறைந்திடும்
அஹதும்சமதை அறிவாலறிந்திடு ம

தாத்துசிபத்துரகசியம் அமைந்தது
ஹயாத்துல்கஹாபாவைக் கருத்தால்தெரிந்திடு
ஆத்துமாவானது அல்ஹம்தைக்கண்டிடு
ஐனிலணுவதைமுகம்மதுமுகையதீனுக்குகாட்டிடு

# அகவல்.

—(ㅇ)—

காவை விளைத்து
ஞானதிலே தான்பூட்டி
வாவதிலே நின்றேன்
வகையதை நானறிய
வாவதுதொபிள் விளைந்தது
நிமிர்ந்து மீமாச்சு
ஆதம்மென்ற மீமை
அறிவில் தான்பூட்டி
பூதமென்ற மீமை
புகழில் தான்மாட்டி
தீனென்ற மீமை
தில்லில் தான்கட்டி
பிஸ்மீனென்ற மீமை
றேயில் தான்கூட்டி
முகம்மதென்ற மீமை
முன்னிறுத்தி
அஹமதென்ற மீமில்
அடைக்கலம் புகுந்தேன்
அணுவதுவையணு
வில்யீன் காண
ஆசையை நிறைவேற்றும்
முகம்மது முகையதீனுக்கு
ஆதிரஹ்மான் ஒன்
அருள்பெற காப்பு.

# பூரணப்பொருள்.

இராகம்-சாவேரி தாளம்—ரூபகம்

பல்லவி,

கண்டுபிடிப்பேன்
கமாலியத்தருளதை பூரணமாக

அநுபல்லவி.

வண்டுநிறைந்திடும் மண்டலமஹ்மூதில்

சரணம் துள்ளல்

முத்தித்தவ சத்தித்தினம் எய்த்தித்திடுஞ்
சித்தத்தருள் க

தனியவன் ரசக்கலிமாவின் யமுதத்தை
யுறுதியால்வாங்கி
கனியாயிலங்கிட அணுவதைக்கண்டிட துள்ளல்
சித்தத்தருள் பத்தித்தினம் மத்தத்தென
முத்தித்தினம் கண்டு
கண்டுவுரைத்திடும் மங்களக்குதுசியை விருப்பமு
டனடிக்
கண்டுதொழுதிடக் கசடன் அகன்றிட துள்ளல்
ஆரைச்சொரி நூரைச்சேர் அகாரமருள்
மகாரத்திரு கண்டு
கண்டுபிடிப்பதுங் கருத்தாலறிவதும் மன்னேன்
விதிப்படியே
தொண்டன்முகம்மது முகையதீனுக்கு துலங்க
இலங்க மயங்காமஹ்முதருள் கண்டு

# அட்டவணை.

—*—

| பக்கம் | சாற்றுக்கவிகள் |
|---|---|


| | நூலாசிரியன்கருத்து |
|---|---|
| | கலிமா அகவல் |
| | ஆரிபீன்மாலை காப்புப்பதிகம் |
| 3 | பதங்கள் |
| 7 | முகையுதீன் ஆண்டவர் துதி |
| 8 | முகையதீன் முனாசாத்து |
| 15 | உடலறிசிந்து |
| 19 | இஸ்லாம் நிலை |
| 20 | ஈமான் சிறப்பு |
| 21 | கண்ணின் விபரம் |
| 22 | ஐன்கலிமாச்சிந்து |
| 32 | அகவல் |
| 33 | திருமொழி |
| 39 | தௌஹீது முனாசாத்து |
| 49 | அந்தாத்தின் அகவல் |
| 51 | இன்சான் அமைப்பு |
| 56 | இருதய ஒளிவு |
| 59 | ஐனுல்லா பாட்டு |

67 காதல் அறிவு

70 அகவல்

73 மெய்ஞ்ஞானக் குறவஞ்சி

77 நினைவுமாலை

82 மனதின் அகவல்

83 சிந்து

85 அகவல்

89 பூரணப்பொருள்

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 17 | நிறைந்ததரு | நிறைந்ததிரு |
| 1 | 18 | ஹு ஹதாக | உ ஹதாக |
| 37 | 19 | யான்படைத்தேன் | —யறியவேண்டி |